Special Take-Away offers
& Set Lunch
Sri Lankan and South Indian Restaurant
JAFFNA HOUSE
Fully Licensed Tandoori Restaurant
90, High Street, Tooting, London SW 17
Tel:020 8767 6668/ 020 8672 7786
web: www.jaffnahouse.co.uk

# புதினம்
PUTHINAM

இங்கிலாந்தில் ஆசிய நாட்டவரின் மிகப்பெரிய சொலிசிற்றர் நிறுவனமாகத் திகழும் லண்டன் - ரூட்டிங்கில்
ராஜா தவராஜாவின்
RAJAH & CO
குற்றவியல் வழக்குகளில் நிபுணத்துவமும் அதிகப்படியான வழக்குகளில் வெற்றியும் அகதிகள் வழக்குகளில் கூடிய அளவு வெற்றிபெற்ற நிபுணர்கள் கொண்ட சட்ட நிறுவனம்.
Approved by the Legal Aid Board as provider of quality Legal Services
295, Balham High Road, London SW 17
Tel: 020 8682 2585 Fax: 0208 682 2575

1-15 JULY 2002
மலர்:7 38 MOFFAT ROAD, LONDON SW17 7EZ TEL: 020 8767 8004 FAX: 020 8767 7866 இதழ்:10


குறுகிய காலத்தில் தமிழர் அபிமானத்தைப் பெற்ற பட்டு மாளிகை
ஒரே விலையில்(FIXED PRICE)லண்டனில் அமைந்த முதலாவது பட்டுச் சேலைகளின் ஆலயம்
வெஸ்டன் ஜுவலர்ஸின்
சில்க் எம்போறியம்
122 UPPER TOOTING ROAD. LONDON SW17 7EN Tel: 020 8672 1900
தையல் வசதிகள்
எங்களிடம் சேலைகள் வாங்கும் உங்களுக்காக பிளவுஸ் போன்றவற்றைத் தைத்துக் கொள்வதற்கு நீங்கள் வேறெங்கும் இனிப் போக வேண்டியதில்லை. நாங்களே அந்த வசதிகளை இங்கேயே செய்துள்ளோம்

## புலி உறுப்பினரும் இடம்பெறுவார்

# தீவக சம்பவம்: விசாரணை குழு

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன், துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள மூவர் கொண்ட சுயாதீன ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இத்தகவலை சமாதான நடவடிக்கைகளுக்கான செயலணித் தலைவர் பேர்னார்ட் குணதிலக அறிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி வேலணையில் வைத்து விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற் றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வேலணையில் மக்களைச் சந்தித்து விவரத்தைக் கேட்டறிந்து கொண்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தனர்.

அதன்பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள சுயாதீன ஆணைக் குழுவை அரசு நியமிக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழு சிபார்சு செய்திருந்தது.

இந்தச் சிபார்சை ஏற்று சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அமைக்க பிரதமர் இணங்கியுள்ளார் என்றும் - அந்தக் குழு 14 நாள்களுக்குள் விசாரணை பெறுபேறுகளையும் விதந்துரைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுள்ளார் என்றும் - சமாதான நடவடிக்கைகளுக்கான செயலணித் தலைவர் பேர்னாட் குணதிலக கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவில் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படும் ஒரு வரும், ஓய்வுபெற்ற பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவரும் உயர் நீதிமன்ற இளைப்பாறிய நீதியரசர் ஒருவரும் இடம்பெறுவர் எனத் தெரியவருகின்றது.

கண்காணிப்புக் குழுவின் அதிகாரி ஒருவரும் இந்த ஆணைக் குழுவில் அங்கம்வகிக்க சிபார்சு செய்யப்பட்ட போதும் ஆணைக்குழுவின் நடுநிலைமைத் தன்மையைப் பொறுத்து அது பின்னர் கைவிடப்பட்டதாகவும் தெரியவந்தது.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் பொருட்டு நிராயுதபாணிகளாக நின்று மக்கள் பணிசெய்த விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் மீதான தாக்குதல் மற்றும் கொலை முயற்சிகளைக் கண்டித்தும் -

நிரந்தர சமாதானத்தைக் கட்டி யெழுப்பும் நோக்குடனும் யாழ்ப்பாணத்தில் இருந்து அல்லைப்பிட்டி ஊடாக ஊர்காவற்றுறைக்கு மாபெரும் மக்கள் பேரணி ஒன்று கடந்த 27ம் திகதி வியாக்கிழமை யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்டது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து முற்பகல் 10 மணிக்குப் புறப்பட்ட பேரணி, ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரியைச் சென்றடைந்தது. அங்கு மாபெரும் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் பேரணி தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனிதநேய அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள் மற்றும் யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் என பல்வேறு பொதுஅமைப்புகள் இணைந்து இம்மக்கள் பேரணிக்கு ஆதரவு தந்தனர். ஆயிரக் கணக்கானோர் இதில் பங்கு பற்றினர்.

வியாபாரநிலையம், அரச மற்றும் தனியார், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிவோர் தங்கள் பணியை நிறுத்தி மக்கள் பேரணியில் பங்குகொண்டு சமாதானவிரோத சக்திகளை முறியடித்து நீதிக்கானதும் நிரந்தர சமாதானத்துக்குமான நிரந்தர வழிவகைகளைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டுமென ஒன்றியத்தின் அறை கூவலுக்கு முழுமையான ஆதரவு கிடைத்தது

London College of Technology
CIMA, AAT, SAGE Line 50, PAYROLL & Computer Courses
Basic Computer, VB.Net, PC Hardware, Net working, Web Design, C++, SQL Server 2000, Oracle 8i, MCSE, JAVA, Advanced JAVA (JSP, EJB, SERVLETS & Web logic)
Dip.in Software Project Development, Operating Systems (Unix, Linux)
போன்ற கணக்கியல்- கணனி சம்பந்தமான பயிற்சி நெறிகள் மிகவும் திறமையாகவும்- அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களினால் நியாயமான கட்டணத்தில் நடாத்தப்படுகின்றன.
மேலதிக தொடர்புகளுக்கு:
WALTHAMSTOW: 020 8527 4478, 020 8527 4471
WEMBLEY: 020 8903 8121
TOOTING: 020 8672 4005


ரூட்டிங்கில் தரமிகு நவீன ஜவளி மாளிகை
Rani FASHION DESIGN & TAILORING
பட்டுப் புடவைகள் என்றதும் உங்கள் ஞாபகத்தில் இருக்க வேண்டியது Rani Fashion. இனி Alperton, Wembley என்று அலையத் தேவையில்லை. சகலவிதமான புடவைத் தெரிவுகளுக்கும் அழகிய டிசைன்களில் சாறி பிளவ்ஸ் தைப்பதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
எம்மிடம் புடவைகள் வாங்கும்
ஒவ்வொருவருக்கும் ஒரு சாறி பிளவ்ஸ்
இலவசமாகத் தைத்துக் கொடுக்கப்படும்.

சாறி பிளவுஸ் என்றால் லண்டனில் ராணிதான்!
சாறி பிளவுஸ் தைப்பதில் லண்டனில் 12 வருடகால அனுபவத்தினை கொண்டவர்கள் என்று நாம் பெருமைப்பட நியாயமுண்டு. இப்படி fit ஆக - அழகாகத் தைக்கிறார்கள் என்று வியந்த பெண்கள் ஆயிரமாயிரம். ஐரோப்பிய நாடுகளிலிருந்தே நம்மைத் தேடி வருகிறார்கள்..
33 Upper Tooting Road, London SW17 7TR
Tel: 020 8767 8081

# நிர்வாணமாகப் பிறந்து ரகசியமாக நிர்வாணத்தை ரசிக்கும் நாம் உண்மையை மறைக்க முடியுமா?



## நெஞ்சினிலே..

வித்துவான் க.ந. வேலன் மனம் விட்டு பேசுகிறார்

**பெற்றோரின் நிர்வாணத்தில் நிர்வாணமாகப் பிறந்து நிர்வாணத்தை ரகசியமாக ரசிக்கும் நாம், 'புதினம்' இதழில் டாக்டர் காட்டும் நிர்ாணத்தைக் காணக் கூசுகிறோம். ஆடை அணிந்து பலர் நிர்வாணமாக இருக்கிறார்கள். நாம் ஆடை அணிந்தென்ன? நிர்வாணத்தை மறைக்க முடிகின்றதா? நிர்வாணம்தான் உண்மை! உண்மையை மறைக்க முடியுமா?**

இன்று படிக்கவும், கேட்கவும் பல வசதிகள் வந்து விட்டாலும் படிக்கும் பழகம் அற்று விடுமோ என்று பலர் பயந்தார்கள். ஆனால், இன்றும் பலர் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் படித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்!

தமிழ் நாட்டின் மேல் தட்டு, நடுத் தட்டு மக்களை விடுங்கள். அன்றாடங் காச்சிகூடக் காலையில் 'தினத் தந்தி' படிப்பான். ஓசியில்தான், ஆனால் படிப்பான்.

பத்திரிகைகளை வீட்டுக்கு வீடு விநியோகிப்பதே அங்கு ஒரு தொழில்.

மதுரைப் புகை வண்டி நிலையத்தில் காலை 4 மணிக்கே சென்னைப் பத்திரிகைகள் எல்லாம் வந்து விடும். மதுரைப் பஞ்சு ஆலைத் தொழிலாளி ஒருவனின் மகன், அவற்றை வீட்டுக்கு வீடு கொடுத்து விட்டுத்தான் பள்ளிக்குப் போவான்.

ஒரு நாள், அந்தச் சிறுவன், பஞ்சு ஆலை முதலாளியின் மகன் கேட்டுக் கொண்டதன்படி, கணக்குப் பாடத்தில் உதவி செயய்யப் போனான். நாற்காலியில் இருந்தான். தற்செயலாக அங்கு வந்த முதலாளி, ''ஏய் PAPER BOY ! ஏன்டா இங்க வந்தாய்- உனக்கு நாற்காலி கேக்கிறதோ''- என்று துரத்தினார். அதற்கிடையில் அங்கு வந்த முதலாளியின் மகன், ''அப்பா! நான்தான் அவனை வரச் சொன் னேன்!'' என்று தடுத்தான். அந்த PAPER BOY இன்று இந்தியாவிலுள்ள தலை சிறந்த 13 விஞ்ஞானிகளில் ஒருவர்; பெயரா? வேண்டாம்!

வளர்ந்த பின் பாராட்டுவோம்; வளரத் துடிக்கிறவனை மட்டம் தட்டுவோம்! பாராட்டுவதற்கு விழா எடுக்க வேண்டும் என்பதில்லை; பொன்னாடை, பொற்கிழி தரவேண்டுமென்பதில்லை; சரியான நேரத்தில் மனம் குளிர்ந்து ஒரு வார்த்தை, அது போதும்! அது வளரும் பாத்தியுள் நீர் சொரந்தற்று என்றார் வள்ளுவர்! யார் கேட்டார்கள்?

ரசிப்பது, பாராட்டுவது ஒரு கலை. நாய் கூட, சாப்பாடு போட்டவருக்கு வாலாட்டகிறது! பூனை உரசுகிறது! தானியம் போட்டு வளர்த்த கோழிகள், நான் சைக்கிளில் வருவதைக் கண்டால் பறந்து தொற்றிக் கொள்ளும்! அப்படி ஒரு அன்பு. வளர்த்த மாடு, ''அம்மா'' என்று அழைக்கிறது! ஆடு கனைக்கிறது! இவை எல்லாம் என்ன? நன்றிகள்! பாராட்டுகள்! மனிதர் மட்டும் என்ன? கை அசைக்கிறார்கள்! கைதட்டுகிறார்கள்! கன்னத்தில் முத்தமிடுகிறார்கள்! முதுகுக்குப் பின்னால் என்னென்னவோ செய்வோம். செய்யக் கூடிய ஒரு நல்ல வேலை, முதுகைத் தட்டிப் பாராட்டுவதுதான். செய்வோமா?

பாராட்டப் பாராட்ட நன்மை வளரும்; தீமை அழியும்! பாராட்டிச்சீராட்டித்தானே எங்களை வளர்த்தார்கள். அதிக செலவில்லாத தர்மம் இது தான்! ஈழத் தமிழர்களிடம் இது கொஞ்சம் குறைவுதான்! அவர்கள் நல்லவர்கள், மட்டம் தட்டுவதிலும் வல்லவர்கள்!

''நல்லாய் குடுத்தன், வாங்கிக் கட்டிக் கொண்டு போறார்!'' என்பார்கள்.

உணர்ச்சிகளை அடக்குவோம்! அல்லது கொட்டுவோம்! ''எனக்கு வாயிலை வருகுது, அங்காலை பெண்பிரசுகள் என்று பார்க்கிறேன்!'' என்பார் அவர்! உப்புத் தின்றவன் தண்ணி குடிப்பான், இஞ்சி திண்ட குரங்கு மாதிரிச் சிலர்! குட்டி போட்ட பூனை மாதிரிச் சிலர்! ஏன் இப்படி இருக்கிறார்கள்? அது பரவணி பரவணியாய் வந்த குணம்!

கடந்த இதழ்களில், பிரபாகரன் ஓர் அரசியல் ஞானி என்று எழுதினேன். பலருக்குச் சந்தோசம்; சிலரால் சீரணிக்க முடியவில்லை!

பலர் பாராட்டினார்கள்! யோகர் சுவாமிகளை நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கும் ஆறுமுகம் இந்த வயதிலும் மனம் திறந்து பாராட்டைக் கொட்டினார். பல 'புதினம்' பிரதிகளையும் தமிழ்நாட்டுக்கும் அனுப்பச் செய்தார். பலர் மௌனமாகப் பாராட்டி இருப்பார்கள். அது கிடக்கட் டும்.

பெற்றோரின் நிர்வாணத்தில் நிர்வாணமாகப் பிறந்து நிர்வாண த்தை ரகசியமாக ரசிக்கும் நாம், 'புதினம்' இதழில் டாக்டர் காட்டும் நிர்வாணத்தைக் காணக் கூசுகிறோம். ஆடை அணிந்து பலர் நிர்வாணமாக இருக்கிறார்கள். ஆடை இல்லாமல் அலங்காரமாகவும் சிலர் இருக்கிறார் கள்.

நிர்வாணச் சாமியார் ஒருவர் வந்திருக்கிறார் என்று சொன்னார்கள். அப்போது எனக்கு வயது இருபது. சிதம்பரம் வடக்கு வீதியிலே அந்தச் சாமியார் குடுகுடுவெனத் துள்ளி நடந்து போனார். நான் துரத்திக் கொண்டு போனேன். திடீரென வீதியிலிருந்த சாக்கடைக்குள் விழுந்தார்! நல்ல வெய்யில், உடம்பெல்லாம் சேறு! தகதக வென ஒளி வீசும் கண்கள்; பெண் மேனி;கரிய சடை; தாடி; பளிச்சிடும் பற்கள்; இளைய தோற்றம்; பார்த்துச் சிரித்தார்! எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது! ஆரோ வடக்கத் தியாராம்! உலகப் பிரக்ஞையற்ற அந்த நிர்வாணம் வணக்கத்துக்குரியது! வணங்கினேன்! வந்து விட்டேன்.

நாம் ஆடை அணிந்தென்ன? நிர்வாணத்தை மறைக்க முடிகிறதா? நிர்வாணம்தான் உண்மை! உண்மையை மறைக்க முடியுமா?

டாக்டர் நண்பர் ஒருவர் என்னிடம் ஓர் உதவி கேட்டார்: ஒன்றுமில்லை. எங்கடை சனங்களுக்கு ஆஸ்பத்திரிக்கு வாற எங்கடை ஆக்கள் வரிசையிலை நிக்கினமிலை. துப்பரவாக வருகினமில்லை. உள்ளாடை எல்லாம் மணக்குது. வாய் மணக்குது, முகத்தை என்னவோ மாதிரி வைச்சிருக்கினம், இங்கிலீஸ் தெரியா விட்டால் ஒன்றும் இல்லை! ஒரு தாங்ஸ் கூடவா சொல்லத் தெரியாது? இதெல்லாம் நான் சொல்லேல்லை! இந்த வெள்ளைக்கார டாக்டர்! நேர்ஸ் சொல்லுகினம்- ஒருத்தருக்கு வருத்தமெண்டால் ஒரு குடும்பமே வரு குது! அங்கை இருக்க இட மில்லை!

அது சரி டாக்டர்! நான் என்ன செய்ய வேணும்? வேண்டுகோள்மாதிரித் தமிழில் ஒன்று எழுதித் தாருங்கோ. நாங்கள் அச்சடிச்சு எல்லாருக்கும் குடுத்துப் பார்ப்பம் என்றார். குடுத்தேன்! ஊரிலே கட்டிக் காத்த இந்தக் கலாச்சாரத்தை இப்ப கைவிடுகினமாம்! நல்ல முன்னேற்றமாம். மகிழ்ச்சிதானே. உடுப்புகளை போட் டால் நிர்வாணம் மறைந்து விடுமோ?

தினமும் பொரிச்சு, வதக்கி, பிரட்டித் துவட்டித் தின்னாதையுங்கோ! சாம்பார் சாதம் நல்லது!


2001இல் தமிழில் வெளி வந்த சிறந்த ஆய்வு நூலென ஆனந்த விகடன் பாராட்டிய

**'ஈழத் தமிழர் யார்?'**

இப்போது லண்டனில் வாழும் பிரபலமான பழம் பெரும் ஈழப் பேச்சாளர்- எழுத்தாளர்
வித்துவான் க.ந. வேலன் எழுதியது. புலம் பெயர்ந்து உலகமெல்லாம் செறிந்து வாழும்
ஒவ்வொரு ஈழத் தமிழனும் படிக்க வேண்டிய சிறந்த வரலாற்று நூல்.
K.N. RATNAVEL என்ற பெயருக்கு £5.00 பவுண்கள்(தபால் செலவு உட்பட) காசோலையோ-
போஸ்டர் ஓடரோ பின் வரும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். K.N. Velan,
8 Rose Court, Blue Bell Way, ILFORD, ESSEX 1GI 2LN



**RADIUS SERVICES LIMITED**

For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning Equipments

உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும்
பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்




020 8692 0257 / 020 8694 2786

19, Wilshaw Street London SE14 6TN

SALES • SERVICE • REPAIRS

# துப்பாக்கிகள் மீண்டும் சடசடக்கும் பேராபத்து!

நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தீவுப்பகுதியில் வேலணையில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

பொதுவாக கடற்படையினர் பயன்படுத்துகின்ற 'பிக்கப்' வாகனம் ஒன்றில் ஆயுதங்களுடன் வந்த நபர்களே புலிகளின் பொறுப்பாளர் ஒருவரைத் தாக்கி அவரை கொல்ல முயன்றதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

தீவகப் பிரதேசம் முழுவதும் கடற்படையின் பூரண கட்டுப்பாட்டினுள் இருக்கிறது. ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்களும் அங்கு செயற்படுகிறார்கள். அங்கு இரவுவேளை ஆயுதம் தாங்கிய நபர்கள் சுதந்திரமாக வாகனத்தில் வந்து இத்தாக்குதலை நடத்த முடிந்துள்ளது என்றால் அதற்கு முழுப்பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் கடற்படையினரே.

தாக்குதல் நடத்திய குழுவில் சீருடை அணிந்தவர்களும் ஆயுதம் தாங்கிய வேறு நபர்களும் இருந்திருக்கின்றனர். அவர்களில் கடற்படையினரும் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தோரும் அடங்கியிருந்ததைத் தங்களால் உறுதிப்படுத்த முடியும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். தீவுப் பகுதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல அடாவடியான சம்பவங்களிலும் கடற் படையினரும் ஈ.பி.டி.பி. குழுவினரும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையை புலிகள் செம்மையாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஆனால், குடாநாட்டில் தீவகப்பகுதி மட்டும் பொதுமக்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் அச்சுறுத்தலான பிரதேசமாக இருக்கிறது.

தீவுப் பகுதி மக்களை கடற்படையினர் தங்கள் சட்ட திட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி அங்கு புறம்பான ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கும் - மனித உரிமை மீறல்களிலும் பாரிய குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்ற ஆயுதக் குழுக்களின் பாதுகாப்பான புகலிடமாக தீவுப்பகுதி மாற்றப்பட்டதற்கும் கடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் அங்கு ஆயுதக் குழுவினரின் அச்சுறுத்தல் எல்லை மீறி இருந்தது நாடறிந்த உண்மை.

இன்று அதன் தொடர்ச்சியாக விபரீதமான சம்பவங்கள் அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள வேளையில் தீவகப் பிரதேசம் முழுவதும் ஓர் இராணுவ வலயம் என்று கடற்படை பிரகடனம் செய்தது. அமைதியான முறையில் அங்கு அரசியல் பணியை ஆரம்பிக்கச் சென்ற புலிகள் இயக்கப் போராளிகள் பலமுறை தடுக்கப்பட்டனர்.

பின்னர் நிபந்தனைகளின் அடிப்படையில் அங்கு சென்ற போராளிகள் மீதும் அவர்கள் கெடுபிடிகளை விதித்தனர்.

நாடுமுழுவதும் அமுலில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை இங்கே செல்லாது என்று கூறி மார் தட்டிக் கொள்வது போன்று கடற்படையின் செயற்பாடுகள் அமைந்தன.

எவ்வளவோ பிரயத்தனங்களின் மத்தியில் மெல்லக்கட்டி வளர்க்கப்பட்டுவரும் சமாதான சூழ்நிலையை நொடியில் தவிடுபொடியாக்கிவிடக்கூடிய ஆபத்தான சூழலை தீவகத்தில் இன்னமும் அரசு அனுமதித்திருக் கிறது. வேலணையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் இந்தப் பாரதூரமான உண்மையை எல்லோருக்கும் உணர்த்தியிருக்கிறது.

ஆயுதபாணிகளால் தாக்கப்பட்ட போராளி 'சயனைட்' அருந்தி தன் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றிருக்கிறார். அப்படி ஒரு விபரீதம் நிகழ்ந்திருப்பின் துப்பாக்கிகள் மீண்டும் சடசடக்கும் பேராபத்துக்கூட ஏற்பட்டிருக்கலாம்.

அரசு - புலிகள் சமாதான முயற்சிகளை குழப்பி மீண்டும் மோதலைத் தூண்டிவிட சில சக்திகள் கங்கணங்கட்டி செயற்படுகின்றன. அத்தகைய சக்திகளின் திரைமறைவுச் சதித்திட்டத்தின் ஒரு வெளிப்பாடுதான் வேலணைத் தாக்குதல் சம்பவம் என்ற ஐயம் தமிழர் தரப்புகளில் எழுந்துள்ளது. அரசு இனியும் காலந் தாழ்த்தாது தீவுப் பகுதி நிலைவரத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து அணுகி அங்கு அவசரமாக இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.

ஆயுதக் குழுக்கள், உத்தரவுகளுக்குக் கட்டுப்படாத படையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், அத்தகையோரை அங்கிருந்து வெளியேற்றவும் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தீவுப்பகுதியில் இன்னமும் தங்கியிருந்து பணிபுரிகின்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கவேண்டியது இலங்கைக் கண்காணிப்புக் குழுவினதும் அரசுத் தலைமையினதும் முக்கியமான பொறுப்பாகும்.

## தமிழர் விடுதலை கூட்டணிக்கு ஆனந்தசங்கரி தலைவர்

அமரர் சிவசிதம்பரத்தின் மறைவை அடுத்து வெற்றிடமாகியிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் பதவிக்கு சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

துணைத் தலைவர் பதவியை மட்டக்களப்பு மாவட்டஎம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் ஏற்றுள்ளார்.

வெற்றிடமாக உள்ள தேசியப் பட்டியல் எம்.பி பதவிக்கு துரைரத்தினசிங்கத்தின் பெயரை செயற்குழு சிபார்சு செய்துள்ளது. அவருடைய நியமனத்தை முறைப்படி கூட்டணியின் நியமனக் குழு அறிவிக்கும்.

தலைவராக வீ.ஆனந்தசங்கரியும், சிரேஷ்ட துணைத் தலைவராக ஜோசப் பரராஜசிங்கமும், ஜோசப் பரராஜசிங்கம் வகித்துவந்த இணை தனாதிகாரி பதவியை செயற்குழு உறுப்பினர் எஸ். தியாகராஜாவும் (எஸ்.டி.ஆர்) தெரிவு செய்யப்பட்டதாக கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் உத்தி யோகபூர்வமாக அறிவித்தார்.

சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் ஆரம்பமான கூட்டம் மாலை வெகுநேரம் வரை தொடர்ந்து நடைபெற்றது. அமரர் சிவசிதம்பரத்தின் நியமனப்பட்டியல் எம்.பி.பதவிக்கு யாரை நியமிப்பது என்பதில்தான் சூடான விவாதங்கள் நடந்தன.

ஆனந்த சங்கரி ஆதரிக்கும் மானிப்பாய் முத்துலிங்கமா அல்லது சம்பந்தனும் சகாக்களும் விரும்பும் மூதூர் துரைரத்தினசிங்கமா? இவர்களில் எவரை நியமிப்பது என்பதில் சூடான வாக்குவாதம் வெகுநேரம் நடந்தது.

துரைரத்தினசிங்கத்தின் நியமனத்துக்கே கூட்டத்தில் ஆதரவு அதிகமாக இருந்தது. இந்த நியமனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பத்தை அனுசரித்து நடக்க வேண்டும் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து துரைரத்தினசிங்கத்தின் நியமனத்துக்கு இருந்த ஆதரவு அதிகரித்தது. அதையடுத்தே மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஆனந்தசங்கரியுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கும் மாவை.சேனாதிராஜா கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

கூட்டம் நடைபெற்றவேளை அவர் கொழும்புக்கு வெளியே தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.


ஆனந்தசங்கரியின் நியமனத்தால் அதிருப்தி அடைந்திருக்கும் மாவை சேனாதிராஜா கட்சியில் தனது எதிர்கால நிலைப்பாடு குறித்து விரைவில் அறிவிப்பர்.

## புலிகள் - அரசு பேச்சு: தடையில்லை! தாமதம்தான்!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகவுள்ள பேச்சுக்கள் தொடர்ந்து தாமதப்படுத்தப்பட்டு வந்தாலும் புலிகளுடனான சமாதான நடவடிக்கைகள் சிக்கலில் இருப்பதாக வெளியான செய்திகளை அரசு மறுத்துள்ளது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதில் சிறு தாமதம் மட்டுமே ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். பேச்சு ஆரம்பமாவதற்கு முன்பு எஞ்சியுள்ள சில பிரச்சினைகள் பற்றிப் புலிகளுடன் பேசித் தீர்வு காணவேண்டும் எனவும் இந்தத் தாமதம் குறித்துத் தான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்தார்.





டாக்டர் வீ. பழனிவேல் F.D.S.R.C.S(Eng)

127 GREEN GATE STREET, LONDON E13 OBG

TEL: 020 8472 9429

1980 இல் இருந்து கிழக்கு லண்டனில் தமிழ் மக்களுக்கு பல் சம்பந்தமான சகல சிகச்சைகளையும் வழங்கும் ஸ்தாபனம்.

சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லா வயதினருக்கும் தகுந்த நவீன பல் வைத்திய சிகிச்சை. அத்தியாவசியமான அடிப்படைச் சிகிச்சைகள் NATIONAL HEALTHஇலும் நவீன COSMETIC DENTAL TREATMENT ஆகியன PRIVATE ஆகவும் அளிக்கப்படும் வசதிகள் உண்டு.

RESTORATIVE TRETMENT, கம்பிகள் மூலம் ஒழுங்கற்ற பற்களை சீர்வரிசைப்படுத்தும் ORTHODONTIL TREATMENT, முரசுகளில் இரத்தம் வருதலை தடுக்கும் PERIODONTAL TREATMENT உட்பட எல்ல சிகிச்சைகளுக்கும் உரிய சிறந்த ஸ்தாபனம்.

அண்மையில் உள்ள UNDER GROUND: PLAISTOW (District Line)

FELLOW IN DENTAL SURGERY OF THE ROYAL COLLEGE OF SURGEONS OF ENGLAND

# நாடி (காண்டம்) ஜோதிடம்



இந்திய வைத்தீஸ்வரன் கோவிலிருந்து வருகை தந்துள்ள

*நாடி ஜோதிட நிபுணர்*

திரு ஜெய செந்தில்குமார் அவர்கள்

இப்போது லண்டனில் உள்ளார்.

*கை ரேகை- சாதகம்- காண்டம்- வாஸ்து ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை- நடக்கின்றவை - நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். உங்கள் விவாக யோகம்- வியாபாரம்- கல்வி- ஆரோக்கியம்- குடும்பப் பிரச்னை- ஆகியவையும்- அதன் பலாபலன்களையும் அறிந்து ஆகம விதிப்படி- பரிகாரங்களும் ஆலோசனைகளும் வழங்குவார்.*

லண்டனுக்கு மூன்றாம் முறையாக வருகை தரும் திரு ஜெய செந்தில்குமார் அவர்கள் சாதகம்– கைரேகை– வாஸ்து சாஸ்திரம் அதிர்ஷ்டக் கற்களும் கணித்துப் பலாபலன் கூறுவார். ஆறு தலைமுறையாக ஜோதிடத் துறையில் பிரசித்தி பெற்று விளங்கும் குடும்பத்தில் உள்ள இவர் பல நாடுகளுக்குச் சென்று ஜோதிட ஆலோசனைகளை வழங்கி வருகிறார். நீங்களும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**ஜோதிட ஆலோசனை தொடர்புகளுக்கு:**

*ஜோதிட நிபுணர் திரு ஜெய செந்தில்குமார்*

**MOBILE: 07903 604 691 TEL: 020 8989 8644**



உ

கணபதி துணை


# ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்- குறொய்டன்

## ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

**திங்கள்- வியாழன்**
காலை 9.30 மணி முதல்- மதியம் 2.30 மணி வரை
மாலை 5.30 மணி முதல்- இரவு 9.30 மணி வரை

**வெள்ளி- ஞாயிறு**
காலை 9.30 மணி முதல்- மதியம் 3.00 மணி வரை
மாலை 5.00மணி முதல்- இரவு 10.00 மணி வரை

விசேஷ அபிஷேகம்- பூசை மற்றும் சிறப்பு வைபவங்களுக்கும் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்



## பூசை நேரங்கள்

காலை 10மணி, நண்பகல் 12 மணி, இரவு 8 மணி

அபிஷேகம் காலை 11.00 மணி

விசேஷ அபிஷேகம்+ பூசை

வெள்ளி, விசேஷ தினங்கள்

அபிஷேகம்+ திருவிழா

மாதந்தோறும் கடைசி வெள்ளி:
இரவு 7 மணி

## முதியோர் கழகம்

*திங்கள்- வெள்ளி ஆகிய நாட்களில் தினந்தோறும் காலை 9.30 மணி முதல் 2.30 மணி வரை முதியோர்களுக்காக தமிழ்ப் பத்திரிகைகள்- வார சஞ்சிகைகள் மற்றும் சமய நூல்கள் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உங்கள் வசதிக்கேற்ப இவ்வரிய வாய்ப்பை நழுவ விடாமல் பயன்படுத்துமாறு முதியோர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

**மேலதிக விபரங்களுக்கு:**

**21 BRGSTOCK ROAD, THORNTON HEATH, CROYDON CR7 7JJ**

**TEL: 020 8689 3466**

பெரு மக்கள் அனைவரையும் திரண்டு வந்து ஸ்ரீ சக்தி கணபதியின் பேரருளை பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

# ஆளுக்கேற்ப– இடத்துக்கேற்ப வேடம் போடும் மனிதர்கள்!



## நிர்வாணம்

டாக்டர் ஸ்ரீதரன்

> பக்தி என்ற பெயரில்– இறை வழிபாடு என்ற பெயரில்– தேச பக்தி என்ற போர்வையில் – சாத்திரங்கள் என்ற பெயரில்– கல்வி என்ற பெயரில்– கலை கலாச்சாரம் என்ற பெயரில்– நீங்கள் செய்யும் கோமாளித்தனங்களை– பித்துக்குளித்தனங்களை பார்த்து இன்று நான் மட்டும் சிரித்தேன்.ஆனால் இப்படியே நீங்கள் தொடர்ந்தால்– நாளை உங்களைப் பார்த்து நீங்கள் வளர்க்கும் நாயும் சிரிக்கும்– மயானத்தில் திரியும் பேயும் சிரிக்கும்..

யுக யுகாந்திரமாக–காலம் காலமாக–ஜீவாத்மாக்களின் இசைக்கு இசைந்த–அவர்களின் பாட்டுக்குப் பணிந்த–அந்தப் பரமாத்மாவான பரமசிவன்–கைலையில் உறையும் அந்தக் கைலைநாதன்–முதன் முறையாக இன்று–அந்த வெள்ளிமலையில் தனிமையில் அமர்ந்து–பூமியைப் பார்த்த வண்ணம்–அண்ட சராசரங்களும் அதிரும்படியாக–வாய் விட்டுச் சிரித்தபடியே பாடிக் கொண்டிருக்கிறான்.

"சிரிப்பு வருது–சிரிப்பு வருது–சிரிக்கச் சிரிக்க சிரிப்பு வருது. மனித மனத்தை–மனித குணத்தை–நினைக்க நினைக்கச் சிரிப்பு வருது".

ஹா–ஹா–ஹா–––ஹா–ஹா–ஹா–––ஹா–ஹா–ஹா–உடல் குலுங்க–உள்ளம் மலர–முப்பது முக்கோடி தேவர்களும் மலைக்கும் வண்ணம்–ஈரேழு உலகங்களும் பிரமிக்கும் வண்ணம் தன்னை மறந்து கைலைநாதன் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறான்.

இப்பொழுது–இந்த நேரத்தில்–பூலோகத்தில் அவனுக்கு யாரைப் பார்த்தாலும்–எதைப் பார்த்தாலும்–எதைக் கேட்டாலும் சிரிப்பு வருகிறது.

பரமசிவனின் சிரிப்பு இது. படைத்தவனின் சிரிப்பு இது. சரியான காரணமில்லாமல்–ஆழமான அர்த்தமில்லாமல் உதயமாகியிருக்க முடியாது இந்தச் சிரிப்பு.

எதற்காகச் சிரித்தான் அந்தப் பரமசிவன்? எதைப் பார்த்துச் சிரித்தான் அந்தப் பரமசிவன்?

நாமோ வெறும் மனிதர்கள்–ஜீவாத்மாக்கள். கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலை நமக்கில்லை–அந்த நிலையிலும் நாமில்லை. ஆனால் நம்மைப் படைத்தவனைப் புரிந்து கொண்டால்–அவனின் போதனைகளை அறிந்து கொண்டால்–மானிட வடிவில் அவ்வப்போது தோன்றி நமக்கெல்லாம் அவன் கூறியவற்றை கவனித்தால்–அவன் சிரிப்பின் காரணத்தை ஊகிக்கலாம்.

ஊகம் என்று வந்து விட்டால்–ஊகிப்போம் என்று புறப்பட்டு விட்டால்–கற்பனை களைக்கும் வரை ஊகித்துக் கொண்டே போகலாம். அந்த ஸ்ரீரங்கநாதன் பாற்கடலில் பள்ளி கொண்டதற்கே அத்தனை அத்தனை காரணங்கள் ஊகிக்கப்பட்டிருக்கும் போது–பரமசிவன் சிரிக்கும்படியாக நாம் இங்கு நடாத்தும் திருவிளையாடல்கள்–கோமாளித்தனங்கள்–பித்துக்குளித்தனங்கள் ஒன்றா? இரண்டா? ஊகிப்பதற்கு!

இருந்தாலும் ஊகிப்போம் அவற்றில் சிலவற்றை!

அடுத்த நொடியில் நமது இருதயம் துடிக்குமா? துடிக்காதா? என்பதற்கு எது வித உத்தரவாதமுமில்லாத போது–இந்த நொடியில் நாம் வெளியில் விட்ட மூச்சு அடுத்த தடவை உள்ளே வருமா? வராதா? என்பதற்கு எது வித உத்தரவாதமுமில்லாத போது–இந்தக் கணத்தில் நாம் வாயில் போட்ட உணவு வயிற்றைச் சென்றடையுமா? சென்றடையாதா?

என்பதற்கு எது வித உத்தரவாதமுமில்லாத போது–––இந்த மனிதர்கள்–––அப்பனே! கைலைநாதா! எங்களைப் பொறுத்தவரையில் எல்லாமே சரியாகத் தான் இருக்கின்றன–எல்லாமே உத்தரவாதத்துடன் தான் இருக்கின்றன–அதைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நான் வாங்கிய இந்தக் கார் மட்டும் ஒழுங்காக வேலை செய்வதற்கு உத்தரவாதம் தா–மிகுதியை நாம் பார்த்துக் கொள்கிறோம்–என்ற மனப்பாங்குடன் புதிதாக வாங்கிய காரின் திறப்பை குருக்களிடம் கொடுத்து–தீபாராதனை காட்டி–காருக்கு முன்னால் தேங்காய் உடைக்கும் தனது பக்தர்களையும்–கைலைநாதனின் ஆசீர்வாதம் கிடைத்துவிட்டது உங்களுக்கு– இனி ஒரு கவலையுமில்லை என்று பக்தர்களுக்கு உறுதி வழங்கும் வேதியர்களையும் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

> பிறந்ததிலிருந்து இறக்கும் வரை– காலையிலிருந்து மாலை வரை– ஒவ்வொருநாளும்- ஒவ்வொரு பொழுதும்- வீட்டில் ஒரு வேடம்- அலுவலகத்தில் ஒரு வேடம்- அலுவலக நண்பனிடம் ஒரு வேடம்- நண்பியிடம் வேறொரு வேடம்- பிள்ளைகளிடம் இன்னொரு வேடம்- இறைவனுக்கு ஒரு வேடம்- நமக்கு நாமே ஒவ்வொரு வேடம்- இப்படி இப்படியே- ஒத்திகை பாராமல்- வசனங்கள் எதுவும் மனப்பாடம் செய்யாமல்- ஆளுக்கு ஏற்ப- இடத்துக்கு ஏற்ப கச்சிதமாக நடித்து வெற்றிகரமாக வாழ்க்கை நடாத்தும் நாம்...

கடந்த பதினைந்து வருடங்களாக–உறவினர்களை நண்பர்களை பொது இடங்களில் சந்திக்கும் போதெல்லாம்–"என்ன இருந்தாலும் நமது நாடு மாதிரி ஒரு நாடும் அமையாது–சொந்த நாடு என்றாலே சொர்க்கம் தான்–இந்த நாட்டிற்கு வந்தது நாம் போன பிறவியில் செய்த பாவம்–யாழ்ப்பாணத்தில் ஒரு கஞ்சியைக் காய்ச்சிக் குடிப்பதில் உள்ள சுகம் இங்கு கிடைக்காது–ஊர் நிலைமைகள் மட்டும் சரியாக வந்தால் எப்படியாவது மூட்டை கட்டி விட வேண்டும்"–என்று வாய்க்கு வாய்–பேச்சுக்குப் பேச்சு கூறி வந்த நம்மில் பலர்–கடந்த சில மாதங்களாக–சமாதானப் பேச்சுகள் சாதகமாகத் திரும்பியிருக்கும் இந்த வேளையில்–ராகத்தை மாற்றி–தாளத்தை மாற்றி–"என்னுடைய கடைசி மகள் இன்னும் ஆறு வருடத்தில் சோதனை எடுக்கப் போகிறாள்–அவளைக் குழப்பக் கூடாது" என்றும்–"வீட்டை இன்னும் நாலு வருடங்களுக்கு நல்ல விலைக்கு விற்க முடியாது–அது தான் கொஞ்சம் யோசனையாக இருக்கிறது" என்றும்–" எனது மூத்த மகளின் பிரசவத்திற்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன" என்றும் "எனது நாய் இன்னும் மூன்று மாதங்களில் குட்டி போடப் போகிறது" என்றும் பிதற்றித் திரியும் நம்மில் சிலரைப் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பிறந்து வளர்ந்த நாட்டைத் துறந்து–நாடு நகரங்களைத் தாண்டி–சமுத்திரங்களைத் தாண்டி–ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அந்நிய நாடு ஒன்றில் வாழும் நாம்–அந்நியன் போட்ட கால அட்டவணையின்படி இயங்கும் புகையிரதத்தில்–பஸ்ஸில் பயணம் செய்து–அந்நியன் வகுத்த கால அட்டவணையின்படி இயங்கும் அலுவலகங்களில் வேலை செய்து விட்டு–மலையில் வீட்டிற்கு வரும் வழியில்–அந்நியன் திட்டமிட்ட காலஅட்டவணையின்படி இயங்கும் பாடசாலைகளில் கற்கும் நம் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து–வயிறு புடைக்க உண்ட பின்–கால் மேல் கால் போட்ட வண்ணம்–இரவு பத்து மணிக்கு பி.பி.ஸி தொலைக்காட்சியில்

காலநிலை பற்றிய அறிவிப்புகள் முடிந்ததும்–தொலைபேசியில் குருக்களை அழைத்து

"ஐயா! இந்த முறை எங்கடை புது வருஷம் எப்ப ஐயா பிறக்குது" என்று கேட்கும் நமது கேள்வியையும்–சாவகச்சேரி பஞ்ஞாங்கத்தின்படி திங்கட்கிழமையும்–கொக்குவில் பஞ்சாங்கத்தின்படி செவ்வாய்க்கிழமையும்–எனது விஷேட கணிப்பின்படி இவை இரண்டுக்கும் நடுவிலும் நமது வருஷம் பிறக்கிறது–என்று கூறும் குருக்களின் பதிலையும்–நினைத்து நினைத்துச் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பிறந்ததிலிருந்து இறக்கும் வரை–காலையிலிருந்து மாலை வரை–ஒவ்வொரு நாளும்–ஒவ்வொரு பொழுதும்–வீட்டில் ஒரு வேடம்–அலுவலகத்தில் ஒரு வேடம்–அலுவலக நண்பனிடம் ஒரு வேடம்–நண்பியிடம் வேறொரு வேடம்–வீட்டில் மனைவியிடம் ஒரு வேடம்–பிள்ளைகளிடம் இன்னொரு வேடம்–இறைவனுக்கு ஒரு வேடம்–நமக்கு நாமே ஒவ்வொரு வேடம்–இப்படி இப்படியே–ஒத்திகை பாராமல்–வசனங்கள் எதுவும் மனப்பாடம் செய்யாமல்–ஆளுக்கேற்ப–இடத்திற்கேற்ப கச்சிதமாக நடித்து வெற்றிகரமாக வாழ்க்கை நடாத்தும் நாம்–யாரோ ஒரு கூத்தாடி–வயிற்றை நிரப்புவதற்காக–வேடம் போட்டு–வசனங்களை மனப்பாடம் செய்து–ஒத்திகைகள் பல பார்த்து–சினிமாவில் நடித்து அதி சிறந்த நடிகன் அல்லது நடிகையாகத் தெரிந்தெடுக்கப்பட்டதும்–தொலைக்காட்சியில்–நேரில்–அவர்களைப் பார்த்ததும்–'ஆ' –என்று வாயைத் திறக்கும் நம்மைப் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பிரித்தானிய அரசியாரின் தலையில் இருக்கும் கிரீடத்தில் எத்தனை வைரங்கள் இருக்கின்றன? அமெரிக்க ஜனாதிபதியிடம் எத்தன்ன செருப்புகள் உள்ளன?

(15ம் பக்கம் பார்க்க)



## என்ன உலகமடா!

லண்டனிலிருந்து மாத்தளை ராஜலிங்கம்

# மாறுபட்ட மனசுகள்

நாட்டில் தற்பொழுது அமைதி நிலைமை நிலவுகின்றது. நிரந்தர சமாதானத்துக்கான பேச்சுகளும் நடைபெறவுள்ளது.
நிரந்தர சமாதானம் ஒன்று வருமா? வராதா? என்ற கேள்விக் குறிகள் இருப்பினும் கூட அங்குள்ள மக்கள் இந்த அமைதி நிலைமைகளை கண்டு ஆரவாரம் கொண்டவர்களாக உள்ளார்கள்; இன்பம் காணுபவர்களாக உள்ளார்கள்; பெரு மகிழ்வு கொண்டவர்களாக உள்ளார்கள்!
நீண்ட நெடுங்காலமாக பெரும் இடி, மின்னல், புயலுக்கு முகம் கொடுத்தவர்கள் இவர்கள்! இந் நிலையில் இந்த அமைதி நிலைமையைக் கண்ட அவர்களால் எப்படி ஆரவாரம் கொள்ளாமல் இருக்க முடியும்?
இதே வேளையில் மேற்குல நாடுகளைப் பொறுத்த வரையில், இங்கு நிரந்தர வதிவிடவுரிமை கிடைத்தவர்கள், எவ்வித சலனமும் அற்றவர்களாக உள்ளார்கள்; அப்படி நிரந்தர வதிவிடவுரிமை கிடைக்காதவர்கள் மனக்கலக்கம் அடைந்தவர்களாகவும், வேதனை நெஞ்சம் கொண்டவர்களாகவும், இருப்பதைக் காண முடிகிறது.
சில தினங்களுக்கு முன்பு, சுவிஸ் நட்டிலுள்ள நண்பர் ஒருவருடன், தொலைபேசயில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அந்த நண்பர் சொன்னார்: அங்குள்ள தமிழர்கள் எல்லாம் பீதியடைந்து இருப்பதாக! இலங்கையல் நிரந்தர சமாதானம் ஏற்படுமாகில், தம்மையெல்லாம் திருப்பி அனுப்பி விடுவர்களோ? என்ற பயம்தான் அதுவென்று கூறினார்.
பழகிய நண்பர் ஒருவரைச் சந்திபதற்காக, அவர் வேலை செய்யும் இடத்துக்குச் சென்றிருந்தேன். அவருடன் நான் கதைத்துக் கொண்டிருந்த வேளையில், தொலைபேசி அழைப்பு ஒன்று அவருக்கு வந்தது! அந்த அழைப்பு வீட்டிலுள்ள அவருடைய மனைவியிடமிருந்துதான்!
நீண்ட நேரம் தொலைபேசியில் மனைவியுடன் உரையாடிய அவர், ''அழ வேண்டாம்! அழவேண்டாம்!'' என்று அவர் ஆறுதல் கூறுவதையும் கேட்கக் கூடியதாக இருந்தது.
அவரது குடும்பத்தில் எவருக்காவது நடக்கக் கூடாதவை நடந்து விட்டது என்று பதைத்துப் போன நான், அவர் பேசி முடித்த பின்விபரம் கேட்டேன்.
தமது அகதி அந்த ..ஸ்த்துக்கான கோரிக்கை மனு, உயர் நீதி மன்றத்திலும் நிராகரிக்கப்பட்டு வந்துள்ளதாகவும், அதனால் மனைவி அழுவதாகவும் பதில் தந்தார்.
*''மாங்குயிலும் மரம் கொத்தியும் கூடு திரும்பின*
*நாங்கள் மட்டும் இன்னும் ஏனோ நாடு திரும்ப முடியல்லே..''*
- நமது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதை வரிகளை, தேனிசை செல்லப்பாவின் இசையில் கேட்டு, நெஞ்சம் உருகியவர்கள் நாங்கள்; கைகளைத் தட்டி, பாடகரைக் களிப்படையச் செய்தவர்கள் நாங்கள்!
நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுமாகிலும், அகதி அந்தஸ்த்துக் கோரிக்கை நிராகரிக்கப்படுமாகிலும், நாடு திரும்புவதற்கான பாதை திறப்புத்தானே! இதற்காக ஏன் அழ வேண்டும்? கலக்கம் அடைய வேண்டும்? வேதனை அடைய வேண்டும்?
அந்த அம்மா எனக்கு சற்று அறிமுகமானவர். அவரிடம்,
'' நாட்டில் தற்பொழுது அமைதி நிலவுகின்றது; நிரந்தர சமாதானமும் வந்து விடும் போல் உள்ளது. அப்படி நிரந்தர சமாதானம் ஏற்பட்டு விட்டால், நாட்டுக்குத் திரும்பிப் போய் விடுவீர்களா?'' என்றேன்.
அதற்கு அந்த அம்மா, ''அங்கே போய் என்ன செய்யிறது?'' என்று என்னிடத்தில் வினா எழுப்பினார்.
''வான் தொடு அழகான பனை மரங்கள்; பரந்த நெற் காணிகள்; விரிந்த செம்மண் பிரதேசம்! - இத்தனையும் கொண்ட அந்த மண்ணில் செய்ய முடியாதது என்ன? என்று மீண்டும் கேட்டேன்.
அப்பொழுது அந்த அம்மா, '' இங்கே சுவிட்சுப் போட்டால் சமையல் செய்து விடலாம்! சுவிட்சைப் போட்டே உடுப்புக்களைத் தோய்த்து விடலாம்! பிள்ளைகளும் இங்கு வாழ்ந்து பழகிப் போச்சினம். தமிழ் கொஞ்சமும் பேச வராது! இந்தப் பிள்ளைகளைக் கூட்டிச் சென்றால் அங்கே அவர்களால் எப்படி இருக்க முடியும்?'' என்று கூறி முடித்தார்.
அந்த அம்மாவின் கூற்றைக் கேட்டுச் சிரிபதா? அழுவதா? என்று எனக்கே குழப்பமாகிவிட்டது.
தமிழ்நாட்டில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள்; ஐம்பதினாயிரம் பேர் வரை முகாம்களே தஞ்சம் என் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! இவர்கள் எல்லாம் தமது சொந்த நாட்டுக்குச் செல்வதற்கு ஆவலாக இருக்கிறார்களென்றும், தயார் நிலைய்யில் உள்ளார்கள் என்றும், அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.
இரு பகுதி மக்களுமே சொந்த மண்ணில் இருந்து பாதுகாப்புக் கருதி அகதிகளாக வந்தார்கள் என்பது உண்மையாயின், ஒரு பகுதி மக்கள் திரும்பிச் செல்வதில் விருப்பம் கொண்டவர்களாகவும், மறு பகுதி மக்கள் வெறுப்புக் கொண்டவர்களாகவும் உள்ளமைக்கான காரணம், புற நிலைமைகளை கொண்டதாகவே உள்ளதை உணரக்கூடியதாக இருக்கின்றது.
இந்தப் புற நிலைமைகள்தான் சொந்த மண், சொந்த மொழி- சொந்தக் கலாச்சாரம் என்பவற்றை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது என்பதை நாம் புறக்கணிக்க முடியாதல்லவா?

## லண்டனில் பன்னிரு திருமுறை விழா

உலக சைவப் பேரவை நடாத்தும் பனனிரு திருமுறை விழா
**1.9.2002** ஞாயிற்றுக்கிழமை லூய்ஷியத்தில் எழுந்தருளியுள்ள
இலண்டன் சிவன் கோயிலில் அமைந்துள்ள சிவன் மண்டபத்தில்
காலை முதல் இரவு வரை முழுநாள் நிகழ்ச்சியாக
நடைபெறவுள்ளது. லண்டனிலுள்ள சகல ஆலய பிரமுகர்களுடன்
தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த
சொற்பொழிவாளரான

### பேராசிரியர் செல்வ கணபதி

பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்கிறார்.
இவ்விழாவில் பங்கு கொள்ள விரும்பும் சிறார்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
உலகப் பேரவை: **020 8531 6435- 020 8575 6007- 0208 690 0401**

# ஆன்மீகத்தின் மீதுள்ள அழுக்கை ஸ்ரீதரன் சுரண்டிக் கழுவுகிறார்!

## புதினம் வாசகர் கருத்து

வணிக விளம்பரங்களாக வெளி வந்து கொண்டிருந்த 'புதினம்', இன்று லண்டனில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் விழிப்புணர்த்துவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்!
'நெஞ்சினிலே' இருப்பதை மனம் திறந்து பேசும் வித்துவான் வேலனும், 'நிர்வாணம்' காட்டும் டாக்டர் ஸ்ரீதரனும், 'அந்த நாள் ஞாபகங்கள்' மீட்கும் சிவானந்தசோதியும் சிந்திக்க வைக்கின்றனர்.
உண்மையைப் போற்றும் நாம் உண்மையை ஒப்புக் கொள்ள மறுக்கிறோம்.
நமது உள் உடம்பை புறத்தே காட்டினால் நமக்கே அருவருப்பாக இருக்கிறது! ஞானிகள் அதைக் காட்டி, இதையா நீ காதலிக்கிறாய் என்று கேட்டார்கள்.
இராமரோடு வாதிட்ட ஜபாலி உட்பட, இன்று வரை யாருமே நாத்தீகரல்ல! சமயவாதிகளினால் பரப்பப்படும் சமுதாயக் கேடுகளைச் சாடினார்கள்.
அவ்வளவே!
அழுக்கைத் தூய்மை செய்ய வந்தவர்களை, துதிக்கப்பட வேண்டியவர்களை, துரோகிகள் என்கிறோம்.
காகத்தை வெறுக்கிறோம்; நாயைப் பன்றியை வெறுக்கிறோம்; ஏன் அவை அழுக்கைத் தூய்மை செய்கின்றன.
வாழ்வைத் தூய்மை செய்து நம்மை வளப்படுத்தும் வண்ணானை, அம்பட்டனை, பள்ளனை, பறையனை, வணக்கத்துக்குரிய இவர்களை, தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கிறோம்.
தெய்வ வடிவங்களுக்குள்ளும் வாழ்வைத் தூய்மை செய்து, காவல் செய்யும் தெய்வங்களை, நவக்கிரகங்களை, ஊர்ப்புறத்தே கோவில் வீதியிலே ஒதுக்குப் புறத்தேதான் வைத்தோம்.
ஆத்திகத்தின் மீது படிந்திருந்த நாத்திக அழுக்கை அகற்றியவர்களை, நாத்திகர் என்கிறோம்.
சமயத்திலும் அழுக்ககற்றிய ஞானிகளை, நல்லோரை, அகத்தே மாசில்லாத நிர்வாணப் புனிதர்களை, சத்தியத்தை நிந்தித்தோம்!
தூய நிலையை நிர்வாணம் என்று சமண பௌத்தங்கள் கூறும் சமணங் கண்ட மகாவீரர், ஆடையின்றி திகம்பரராக நிர்வாணமாகவே வாழ்ந்தார்!
பட்டுப் பீதாம்பரம் தரித்து, பல்லக்கில் பவனி வரும் பண்டார சந்நிதிகளுக்கும், எடைக்கு எடை பொற்காசுகளைக் காணிக்கைகளாக வாங்கும் காமகோடிகளுக்கும், இது புரியாது!
*ஓடும் பொன்னும் ஒப்பவே நோக்கி*
*கூடும் அன்பினில் கும்பிட்டு*
*வீடும் வேண்டா விறலன் விளங்கிய*
*அவர்கள்*
*-கந்தை மிகையாம் எனக்*
*கௌபீனத்தோடு வாழ்ந்தனர்.*
அத்தகைய தூய உள்ளங்களை, வேதத்தின் கர்ம காண்டத்தால் பிழைத்துவரும் தண்டகாரண்யத்துப் பிராமண குருமாரால், ஒரு போதும் உணர முடியாது!
'புதினம்' இதழில் தொடர்ந்து எழுதி வரும் டாக்டர் ஸ்ரீதரன், ஆத்திகத்தின்மீது படிந்திருக்கும் தூசு துடைத்து, அழுக்கைச் சுரண்டிக் கழுவுகிறார்! அவர் நாதகீகரல்ல!
*லோகா சமஸ்தா சுகினோ பவந்து* என வாழ்ந்து வரும் நம் குருமார் வணக்கத்துக்குரியவரே!
ஆனால் வெம்பிளி ஈழ பதீஸ்வரர், ஈழத்தை மாத்திரமல்ல, இந்து சமயத்தையே தலை குனிய வைக்கிறாரே!
இத்தகை நிலை இருக்கும் வரை, நிர்வாணம் காட்டப்பட்டுக் கொண்டே இருக்கும்.
டாக்டர் ஸ்ரீதரன் போன்றோரின் 'சத்திர சிகிச்சை'களும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். கவலை வேண்டாம்! பாவம், நமது சமயத்தை வாழ விடுங்கள்!

**-நுரை முருகையன்**
**27 Gilby Road,**
**Nebury Park**
**Ilford, Essex**

## குற்றம் குறை சொல்வது சுலபம்!

'நிர்வாணம்' எழுதுகிற டாக்டர் ஸ்ரீதரனுகு தான் ஒரு மகான் என்ற எண்ணமாக்கும். என்னத்திலைதான் அவர் குற்றம் குறை கண்டு பிடிக்கவில்லை? குற்றம் குறை கண்டு பிடிப்பது சுலபம். ஆனால் நல்லதை மக்களுக்குச் சொல்வதுதான் கடினம். எல்லாம் அளவோடு இருந்தால் எந்தப் பிழையுமே நடக்காது. மின்சாரம் ஆட்களையும் கொலை செய்யும். எவ்வளவு நல்ல காரியங்களுக்கு அது பயன்படுகிறது என்பது உலகம் அறிந்தது. அப்படித்தான் எதைச் செய்யும்போதும் நல்ல நோக்கு இருந்தால் சரி. ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் சாடுவதை நிறுத்தி- இந்த நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஏதாவது உருப்படியாக ஸ்ரீதரன் செய்யவதே பெரும் தொண்டாகும்.

**-எஸ். ஆறுமுகம்**
**16 WARDS ROAd,**
**LONDON SE13**

## தமிழ் 'பரதேசிகள்' தொல்லை!

தாயகத்தில் நிகழ்ந்த அவலங்களைக் காரணங்காட்டி அந்நிய மண்ணில் எங்கள் குடும்பத்தோடு தஞ்சம் அடைந்து இங்கு நிம்மதியாக வாழலாம் என்றால் படுகிற துன்பம் போதும். யாரால்? எங்களைப் போலவே காரணங்களைக் காட்டி இங்கு வந்த ஒரு சில தமிழ் 'பரதேசி' களினால்தான்! அங்கேயே நாங்கள் இருந்திருக்கலாம். சிங்கள ராணவத்தினால் உயிரைப் போக்கியிருக்கலாம்! ஆனால் இங்கு எங்கள் பெண் பிள்ளைகள் பெயரைச் சொல்லி, மனதை நோக வைக்கிற வார்ததைகளை கூறி, தொலை பேசியில் காலை- பகல்- இரவு- சாமம் என்று பாராமல் தொல்லை கொடுக்கிறார்கள்! அது மட்டுமா? பள்ளிக் கூடத்து வாசலிலும், பஸ்ஸிலும் 'தங்களுடன் வரும்படி' கெடு பிடி! இந்தச் சித்திர வதையைவிட அங்கேயே நாங்கள் சிங்களவன் கையால் செத்திருக்கலாம்! இவர்களும் ஒரு தமிழ் தாயின் பிள்ளைகள்தானே! பெண் சகோதரர்களுடன் கூடப் பிறந்தவர்கள்தானே! 'புதினம்' இதில் உதவ முடியுமா?
**(பாதுகாப்புக் கருதி பெயர் முகவரி வெளியிடவில்லை)**


## முத்துமாரியம்மா சாஸ்திர நிலையம்

**இந்தியாவில் உள்ள திருப்பதியிலிருந்து வருகை**
**தந்திருக்கும் பிரபல்யமான சாஸ்திர நிபுணர்**
**திரு லஷ்மணராஜ் அவர்கள்**
**கைரேகை, முகநாடி பார்த்து கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றையும் உள்ளபடியே கூறும் வல்லமை பொருந்தியவர். உங்களுக்கு எவ்வித தோஷம் இருப்பினும் அதற்கான பரிகாரம் யாவும் செய்து கொடுப்பதில் வல்லமை உள்ளவர்.**





நீங்களும் உங்கள் பலன்களை அறிந்து பயன்பெறவும்
அவரது ஆலோசனை கேட்டு வளமான வாழ்வினையடைய
இன்றே தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
தொடர்புகளுக்கு:
காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்
அவர்களைக் காண்பது உங்கள் அதிஷ்டம்.
முகவரி:
**POUND PARADISE**
40, London Road, West Croydon CRO 2TA
**Tel: 020 8681 3056 Mobile: 07960 589 467**

எழுத்தாளர் முல்லை அமுதன் அயராத முயற்சியில் மீண்டும்

'காற்று வெளி' சஞ்சிகை ஆதரவில்

## 'ஈழத்து நூல்களின் கண்காட்சி-2002'

(ஈழத்து புலம் பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம் பெறும்)

காலம்: 28.9.2002

Trinity Community Centre Hall, East Avenue, Eastham,London E12 (Eastham Tube Station அருகில்)

விபரங்களுக்கு:

முல்லை அமுதன்- 020 8586 7783

## தமிழ் பாடசாலை விளையாட்டுச் சங்க 10 வருடநிறைவு கொண்டாட்டம்

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் ஐக்கிய ராச்சியம் தனது பத்தாவது வருட நிறைவை கோலாகலமாகக் கொண்டாடுகிறது. ஆடலுடன் இரவு விருந்தும் உண்டு. எதிர்வரும் 6.7.2002 சனிக்கிழமை Wallington Hall, 3 stafford Road, wallington,Surrey(Opposite Sainsbury's) இல் இக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. நண்பர்களுக்கு மட்டும் டிக்கட்டுகள் விற்பனையாகின்றன. தனி நபருக்கு: £10.00

## வடக்கு கிழக்கு புற்று நோய் உதவிக்கு லண்டனில் மாபெரும் கலை நிகழ்ச்சி

புற்று நோயினால் பீடிக்கப்பட்டு இலங்கையில் மகரகமை புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகச் செல்லும் வசதி குறைந்த தமிழ் நோயாளர்களுக்கு உதவும் முகமாக லண்டனை மையமாகக் கொண்டு இயங்கும் வடக்கு கிழக்கு புற்று நோய் உதவி மையம், இவ்வாண்டு நிதி சேர்க்கும் பெரும் திட்டத்தன் கீழ் 8 ம் திகதி செப்ரெம்பர் 2002 அன்று மாலை கலை நிகழ்ச்சி ஒன்றை நடாத்தவுள்ளனர். மகாகவி பாரதியாரின் பூட்டனான ராஜ்குமார் பாரதியின் இன்னிசை நிகழ்ச்சியுடன், நடன ஆசிரியை ராகினி ராஜகோபாலின் ''நாட்டியாலயா'' சிரேஷ்ட மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கிறது. மாலை 6மணிக்குSir James Hawkey Hall, Broomhill Road, Woodford,Essex IG8 0BG இல் இந்தக் கலை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. புற்றுநோயாளர்களுக்கு நிதி சேகரிப்பதற்காக மற்றொரு திட்டத்தையும் அறிவித்துள்ளனர். அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்களை ஒரு பவுணுக்கு விற்கவுள்ளனர். அதிர்ஷ்டசாலிகள் 10 பேருக்கு பெறுமதியான நல்ல பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

டாக்டர் ஜெ. நமசிவாயம்:

Tel: 020 8505 4725

டாக்டர் என். இந்திரசேனன்:

e-mail; nji@tesco.net

தங்கராஜா

## சைவ முன்னேற்றச் சங்க வெள்ளிவிழா 31.08. 2002 சனிக்கிழமை

சைவ முனனேற்றச் சங்கத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழா இவவாண்டு 31.08.2002 சனிக்கிழமை நடைபெறவிப்பதாக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். இங்கலாந்தில் வாழும் சைவத் தமிழ் மக்களின் ஒரே அமைப்பாகத் தன்னலமற்ற சேவை ஆற்றி வரும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளி விழா கொண்டாடப்படுகின்ற இந் நந் நாளில் வேறு விழாக்கள் நடத்துவதைத் தவிர்த்து அனைவரையும் இவ்விழாவில் கலந்து தமிழையும் சைவத்தையும் பெருமைப்படுத்துமாறு லண்டன் தமிழ் மக்களை தயவாக சைவ முன்னேற்றச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## சிங்கப்பூரில் தங்குமிட வசதி

சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு, தளபாட சாமான்களோடு, சகல வதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்பச் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

மேலதிக விபரங்களுக்கு:

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, #15-14 International Plaza, Singapore 079903

எந்நேரத்திலும் லண்டனில் இருந்து தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:

அப்பு: 0065 975 14 941

e-mail: lingam-wedding@hotmail.com

## லண்டனில் மீண்டும் 'பூபாள ராகங்கள்-2002'

கடந்த இரு ஆண்டுகளின் பெரு வெற்றியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் கொம்மந்தறையில் அமைந்துள்ள கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளை நடாத்தும்

'பூபாள ராகங்கள்2002'

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி சனிகிழமை மாலை 5 மணிக்கு மேற்கு லண்டனிலுள்ள Hayes Beck Theatre அரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் இம்முறை பல சிறந்த கலைப் படைப்புக்கள் ஒருங்கிணைகின்றன. அவை வருமாறு:

ஐரோப்பாவின் முன்னணி வெள்ளி விழா நடன ஆசிரியை ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' நடனப் பள்ளி மாணவிகளின் 'நாட்டியக் கலை அரங்கம்'.

தொடர்ந்து மேடையேற்றங்கள் மூலம் உலகின் பல பாகங்களிலும் தமிழ் நாடகங்களை மேடையேற்றிய பாலேந்திராவின் தமிழ் அவைகாற்றுக் கலைக்கழகம் வழங்கும் 'வேருக்குள் பெய்யும் மழை' 'காத்திருப்பு' ஆகிய இரு நாடகங்கள்.

அகில இலங்கைக் கம்பன் கழக ஸ்தாபகர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் ஈழத்து, லண்டன் முன்னணி தமிழறிஞர்கள் கலந்து கொள்ளும் 'பட்டி மன்றம்'.

'இல்லறத் தலைமைக்கு பெரிதும் பொருத்தமானவர்கள் ஆண்களா? பெண்களா?'

நடுவர்: கம்பவாரிதி இ. ஜெயராஜ்

ஆண்களே:

சட்டத்தரணி சு.சிறீகாந்தலிங்கம்

காரைக் கவி வீரவாகு.

பெண்களே:

ஸ்ரீ பிரசாந்தன்(அமைப்பாளர்- அ.இ. கம்பன் கழகம்)

திருமதி மாதவி சிவலீலன்

'கானக்குயில்' புகழ்

இளைய தாரகைகள் துஷி- தனு செல்லத்துரை சகோதரிகள் மற்றும் கலைஞர்கள் இணைந்து வழங்கும் 'கான மழை' மெல்லிசை.

பிரதம விருந்தினராக இலங்கையில் வடக்கு கிழக்கு மகாண உதவிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான வல்வை அனந்தராஜ் கலந்து கொள்கிறார்.

அனுமதி: £25.00 (RESERVED)

£10.00 (UN RESERVED)

தொடர்புகளுக்கு:

TEL: 020 8646 5105

020 8933 0920

020 8569 0458

MOB:07947 471 529



# இலண்டன் அருள்மிகு ஸ்ரீ சிவன் திருக் கோயில்

(Rgd. charity No: 1051516)

4A, CLARENDON RISE, LEWISHAM, LONDON SE 13 5ES

TEL: 020 8318 9844

# உபயகாரர்களை அன்புடன் அழைக்கிறோம்

எம் பிரான் சிவபெருமானது ஆலயம் லூயிஷம் பதியில் ஆரம்பிக்கப் பெற்று தற்போது ஒன்பது வருஷங்களாகின்றன. அன்று முதல் இன்று வரை, சிவபெருமானது திருவருளோடு, பக்தப் பெருமக்களாகிய தங்களுடைய பேருதவியுடன், இவ்வாலயம் படிப்படியாக வள்ச்சி பெற்று, மேன்மை அடைந்து கொண்டிருக்கிறது. அத்துடன், மேலும் பல திருப்பணிகளை ஆலயத்தில் செய்து, சிவன் ஆலயத்தை எமது சமய முறைப்படி அமைத்து, வழிபாடு செய்ய வேண்டிய ஒரு நிலைப்பாடு எம் எல்லோருக்கும் உண்டு. எனவே இது பற்றி நாம் கலந்தாலோசிக்கும் பொருட்டு, எதிர்வரும்,

07.07.2002 ஞாயிறுபிற்பகல் 5.00மணிக்கு

சிவன் மண்டபத்தில் ஒரு உபயகாரர்கள் ஒன்று கூடல் நிகழ்வினை நடாத்த தீர்மானித்துள்ளோம். எனவே இந் நிகழ்ச்சியில்,

தமிழ் புது வருஷம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிப் பூரம், ஆடி அமவாசை, ஆவணி மாத அலங்காரத் திரு விழா, வைரவர் பொங்கல், ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி சனி வாரம், நவராத்திரி, கேதார கௌரி விரதம், கந்த சஷ்டி, சோம வாரம், திருவெம்பாவை விளக்கீடு, விநாயகர் விரதம், திருவெம்பாவை, தைப் பொங்கல், தைப் பூசம், தசதின உபசார விழா, சிவராத்திரி, பங்குனி உத்தரம், மாதாந்த சதுர்த்தி, நடேஷர் அபிஷேகம், சமய குரவர் குரு பூஜை அறுபத்து மூவர் குரு பூஜை,

ஆகிய தினங்களை உபயமாக நடாத்தும் அன்பர்களையும், மற்றும் சகல உபயகாரர்களையும்,

அன்புடன் அழைக்கிறோம்.

இந் நிகழ்வில் தாங்கள் அனைவரும் எம்முடன் சேர்ந்து, எதிர்காலத்தில் இவ்வாலயத்தின் செயற்படுகளுக்கு எமக்குப் பேருதவியாகவும், பக்க பலமாகவும் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். எனவே தவறாது சமுகமளிக்கவும்.

வணக்கம்.

இங்ஙனம்,

நிர்வாக சபை,

இலண்டனள் சிவன் கோவில்

திறமையும் நேர்மையும் அனுபவமுமிக்க

சட்ட நிறுவனமாக லண்டனில் முன்னணியில் திகழும்

திரு. ராஜா தவராஜாவின்

# ராஜா அன் கோ

குற்றவியல் (Criminal) வழக்குகள்– பொலிஸ் நிலைய விசாரணைகள் சட்ட உதவி சபையின் அங்கீகாரம் பெற்ற சட்ட நிறுவனங்களே பொறுப்பெற்று சட்ட உதவி மூலம் நடத்தலாம்.

Community Legal Service

Criminal Defence Service

**Quality Mark tells You that the firm offers a quality assured service**

பல வருட குற்றவியல் வழக்குகளில் அனுபவம் உள்ள பல சட்ட நிபுணர்களைக் கொண்ட

**Approved by theLegal Aid Board as provider of quality Legal services**

# RAJA & CO

If you need this.... Legal Aid

Look for this.... LEGAL AID FRANCHISE A QUALITY SERVICE *Approved by the Legal Aid Board*

**You can choose a franchised solicitor with confidence because they have been quality checked by the legal Aid Board. Only franchised firms can display the legal aid franchise logo. For quality legal aid service visit your local franchised firm.**

# RAJA & CO

**SOLICITORS Near Tooting bec Tube Station**

295,BALHAM HIGH ROAD, LONDON SW17

TEL: 0181 682 2585 FAX: 0181 682 2575

தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகை மாளிகை

# AMBAAL JEWELLERS

## THE LEADERS IN 22K GOLD JEWELLERY

ருட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகாமையில்

மங்கள மங்கையரின் நகைகளுக்கு தனி அழகு தரும்
AMBAAL JEWELLERS பளிச்சிடும் பசும் பொன்.
பார்ப்பவர்கள் மனதைக் கொள்ளை
கொள்ளும் பத்தரை மாற்றுத்
தங்க நகை அரங்கம்
AMBAAL JEWELLERS

ஆரவாரமில்லாமல் வாடிக்கையாளுக்கு
நன்மையான பணி செய்வதே நமது நோக்கம்

உங்கள் எண்ண்ம் போல் வண்ணம் கொண்ட
ஆபரணங்கள் அணி வகுக்கும்
அழகான தங்க நகைச் சோலை

மலிவின் மறுபெயர்
அம்பாள் ஜூவலர்ஸ்

திருத்த வேலைகள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
பொன்னுருக்கலுக்கு வசதிகள் செய்துதரப்படும்.

ஏழு நாட்களும் திறந்திருக்கும்





# அம்பாள் ஜூவலர்ஸ்

176, UPPER TOOTING ROAD, LONDON SW17 7ER

Tel: 020 8672 9955 Fax: 020 8672 7097

Web:ambaaljewellers.com E-mail:sales@ambaaljewellers.com



# அந்த நாள் ஞாபகம்...

-நா. சிவானந்தசோதி

## மந்திரிப் பதவி பெற்றதும் காலை வாரிவிட்டார்!

**1956** ஜுன் 2ம் திகதி-
இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேறியது.
அரசாங்க ஊழியர் சிங்களம் படிக்க வேண்டும். 1956க்கு முன் சேவையில் உள்ளவர்கள் சிங்களம் படித்தால் தான் உத்தியோக உயர்வு-
இந்தக் கெடுபிடிகள் மத்தியில்-
சிங்களம் படிக்க வேண்டாம் என்ற கொள்கையோடு அரசாங்க எழுது வினைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சிங்களம் படிக்க விரும்பமில்லாத ஊழியர்கள் சங்கத்தில் இணைந்தனர்.
அந்தக் கால கட்டத்தில், தமிழரசுக் கட்சியும்- அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக மொழிச் சட்டம் செல்லுபடியாகாது என்ற வழக்கு ஒன்றை, அரசாங்க ஊழியர் சார்பில் அரசங்க ஊழியர் செ. கோடீஸ்வரன் தாக்கல் செய் தார்கள்.
இந்த வழக்கை ஏற்று நடத்தியவர்: திருச்செல்வம் கியூசி.
1965ம் ஆண்டு, யுஎன்பியுடன் சேர்ந்து மந்திரிப் பதவி பெற்றுக் கொண்ட திருச்செல்வம், என்ன செய்தார் தெரியுமா?
மந்திரிப் புதவி பெற்றதும், இந்த மொழி வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறும், தான் மந்திரியாக இருப்பதால் தொடர்ந்தும் இந்த வழக்கில் ஆஜராக முடியது என்றும், கைவிரித்து விட்டார்.
இந்த வழக்குக்காரணமாக திருமலையைச் சேர்ந்த கோடீஸ்வரைன் தண்டனையாக Punishment Transfer கேகாலைக்கு மாற்றப்பட்டார்.
ஆனால்,
இந்த வழக்கை தொடர்ந்து நடாத்தஅரசாங்க எழுதவினைஞர் சங்கத்தின் நிர்வாகம் தீர்மானம் செய்தது. வழக்கை வாபஸ் பெறாமல் தொடர்ந்து நடாத்தியது.
நிர்வாக சபையில் உள்ள நாங்கள் அரை மாதச் சம்பளத்தைக் கொடுதும், தமிழ் மக்களிடம் நிதி பெற்றும், வழக்கை நடத்தத் தீமானித்தோம்.
அந்த நாட்களில், கொழும்பு தமிழ் முதலாளிகளிடம் வழக்கு நடத்த பணம் கேட்டோம். ''சிங்களத்தைப் படிக்கலாம்தானே. இதற்கு ஏன் வழக்கு?'' என்று கை கொட்டிச் சிரித்தவர் களும் உண்டு.
எமது சங்கத்தின் சார்பில் ரங்கநாதன் கியூசி வழக்காடினார். லண்டன் பிரிவு கவுன்சில்வரை வழக்கு வந்தது!
ஆனால் இலங்கை குடியராசாகப் பிரகடனம் செய்தபின், அந்த வழக்கை லண்டன் பிரிவுக் கவுன்சில் விசாரிக்க முடியாது போய்விட்டது.
இந்த நிலை ஏற்படாவிட்டால், அந்தக் கோடீஸ்வரன் வழக்கு நிச்சியம் வெற்றி பெற்றிருக்கும்.


லண்டனில்
இந்திய ஹோமியோபதி
வைத்திய நிபுணர்


மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி
மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்
இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
டாக்டர் ஆர். தியாகராஜன்

ஜுன் 27 முதல் ஜுலை 7ம் திகதி வரை

லண்டனில் தங்கியிருந்து நீண்ட கால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.
மாறி மாறி வரும் ஆஸ்த்துமா(Asthuma)சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ்(Diabetes)
எக்ஸிமா(Eczema)மலட்டுத்தன்மை- பேரின்மை (Sterrility)ஆண்மைக் குறைபாடுகள்(Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.
ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side Effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

டாக்டர் தியாகராஜனிடம்
சிகிச்சை பெற விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:
0798 480 3488


அது... 1972இல் இலங்கை குடியரசான காலம். இலங்கை சிறீலங்கா ஆனது; இங்கிலாந்து மகாராணியாருக்கு சுதந்திரம் அடைந்தது முதல் தரப்பட்டு வந்த விசுவாச ஸ்தானம் போனது.
முதன்மை மொழியானது சிங்களம்; முதன்மை மொழியானது பௌத்தம்! இந்த மாற்றம் தமிழ்க் கட்சிகளுக்கு ஐக்கியத்தின் முக்கியத்தவத்தைக் காட்டியது; அதில் நாட்டத்தை ஊட்டியது!
ஒன்று பட்ட தமிழ் இனத்தின் இதய நாதமாக தமிழர் ஐக்கய விடுதலை முன்னணி உதயமானது!
தந்தை செல்வா, தலைவர் ஜீ.ஜீ, மலையகத் தலைவர் தொண்டமான் ஆகியோரைக் கொண்ட முக் கூட்டுத் தலைமை ஐக்கிய முன்னணிக்கு என அறிவிக்கப்பட்டது. இணைப்புக் கூட்டம் எதற்கும் சமூகம் தராத தலைவர் ஜீ.ஜீயின் மௌனம், வட்டுகோட்டை மகாநாட்டில் தனித் தமிழ் ஈழக் கொள்கை முரசு கொட்டியதுமே, மலையகத் தலைவர் தொண்டமானின் மறுப்பு வெளியான அவலம்! அதுவரையும் இணைந்து நின்ற கல்குடா தேவநாயகம் ஐக்கிய தேசியக் கட்சியின் பயமுறுத்தலுக்கு அடிபணிந்து விலகிய துயரம்! எல்லாமே கூட்டணியை ஆட்டம் காண வைத்த நிலை! தமிழ் காங்கிரஸின் மூன்று பா.உ க்களில் நல்லூர் அருளம்பலம், வட்டுக்கோட்டை தியாகராஜா ஆகியோர் அரசுடன் ஐக்கியப்பட, கிளிநெந்சி ஆனந்தசங்கரி மட்டுமே புதிய கூட்டணியில் ஒட்டி நின்றார்.



இந்தச் சங்கடத்தைப் போக்க சிங்கமென சிலிர்த்து எழுந்த தலைவர் அமரர் சிவசிதம்பரம்! கூட்டணி தமிழ் மக்களின் கூட்டமைப்பு என்பதைக் காட்ட ஓடி ஓடி உழைத்தார். தந்தை செல்வாவின் தலைமையில் கூட்டணி வண்டியை இழுத்து ஓட்டும் இரணை மாடுகள் எனத் தலைவர் அமிரோடு, சிவாவும் பாராட்டப்பட்டார். தமிழரசு சத்தியாக்கிரகத்தில் இணைந்தும், உடுப்பிட்டித் தொகுதியின் தொடர் மூன்று தேர்தல் வெற்றிகளும் மணியகாரன் குடும்பம், மனித நேயம் மிக்க வழக்கறிஞர் என்ற பெருமைகளும், ஏற்கனவே மக்களிடம் அவருக்கு மதிப்பை ஏற்றி நின்றது.
உயர்ந்த கம்பீரமான உருவம்; சிவந்த நிறம்; கண்ணாடியை ஊடறுத்து ஒளிரும் கனிவான பார்வை; மேவி வாரிய நரைத்த முடி; வெண்கலக் குரல்; சிங்கத்தின் கர்ச்சனை; செயற்படத் தூண்டும் பேச்சு; தொண்டரோடு தோள் தட்டி உரையாடும் தோழமை, என்பன மக்களிடையே அன்பும் மதிப்பும் நிறைந்த விருப்பத்தை அவர்மேல் உரித்தாக்கியது!
அவர் பேச எழுகிறாரென்றாலே, ஆரவாரம் பீறிடும்! ஒலி வாங்கி தன் உச்ச உயரத்தக்கும் நிமிர்த்தப்படும். உரிமையை நிலை நாட்ட உழைக்கும் உறுதியான தொனியோடு உதிரும். அவரது ஒவ்வொரு வசனமும் கை தட்டலைப் பெறும்.

**1983**இன் சர்வசன வாக்கெடுப்பு ஆறு ஆண்டுகளுக்கு ஜே.ஆர். தன் ஆட்சியை தொடர வைக்கச் செய்த சூட்சி. அதனை ஏற்க மறுத்த கூட்டணி பா.உ க்களின் பதவி விலகல்... இயக்கங்களின் ஆரம்பம்! தமிழ்த் தலைவர்கள் கொலை என்பவற்றின் பின் ஐக்கியப்பட்ட தேசிய அமைப்பு அண்மையில் உருவானது.
தேசியப்பட்டியல் பா.உ வாக சிவா ஐயா வெளியானார்! இனத்தின் நலனுக்காக காலத்தின் கடமையை ஏற்கும் தலைவரான அவர்,



# நினைவில் நிற்கும் ஊர் நினைவுகள்

கவிஞர் பாலை ஜெயபாலன்

## எல்லோரது அஞ்சலிக்கும் உரிய தலைவர்

விடுதலைப் புலித் தலைமையையே ஈழத் தமிழர் விடுதலைக்கு இன்று வேண்டியது, என்பதை வெளிப்படுத்தினார்.
79 வது வயதிலே இறக்கும்போதும், எல்லோரது அஞ்சலிக்கும் உரிய தலைவராக இறவாப் புகழோடுநிலையானார்.
ஊரின் நினைவைக் கிளறிய இறப்பல்லவா அவருடையது...


COLORAMA
photo imaging specialists

The specialists for

Passport Photos | Family Portraits from £15 | Injury Photos from £15





and Reprints & Enlargements
Bring this advert to get a FREE 8x10" enlargement with every studio sitting over £15

Wembley
485 - 487 High Road
Wembley, HA9 7AG
Tel: 020 8903 7025

Harrow
238 Northolt Road
South Harrow, HA2 8DU
Tel: 020 8422 4236

Kilburn
138 Kilburn High Road
London, NW6 4JD
Tel: 020 7372 1208



ஏழ் சுவை ஈழம்
EARL SUVAI EELAM
369 Church Lane, London NW9 8JB
Tel: 020 8205 9841
Sri Lankan & South Indian Cuisine

உங்கள் கொண்டாட்டங்கள் அனைத்துக்கும் வேண்டிய சுவையான உணவுகள்.. வாரம் 7 நாட்களும் உங்கள் உறவுகளுடன் கூடி உண்டு சுவைக்க...தாயகத்து சிற்றுண்டி வகைகளை அனுபவமிக்கவர்கள் கைவண்ணத்தில் பெற்றுச் சுவைக்க.. ஏழ் சுவை ஈழம்

நீங்கள் விரும்பும் ஐந்து வகையான சிற்றுண்டி வகைகளை *(மிக்ஸர்- பகோடா- லட்டு- பூந்தி லட்டு- முறுக்கு- தட்டுவடை- பயித்தம் உருண்டை- சிப்பி- கேசரி)* பையில் அடைத்து இலகுவாக உங்கள் கொண்டாட்டத்துக்கு விநியோகம் செய்ய நீங்கள் நாட வேண்டியது(50p-60p per packet)..ஏழ் சுவை ஈழம்
100 இடியப்பங்கள்(white or Brown) சொதி சம்பலுடன்- £14.00
100 இடியப்பங்கள்(White or Brown) மட்டும்- £12.00
100 வீச்சு ரொட்டிகள் மட்டும்- £30.00
100 வடைகள்- £20.00
100 கட்லெட்டுகள்Or100 சூசியங்கள்Or 100 போண்டாக்கள்- £30.00
100 மட்டன் றோல்ஸ்- £40.00
100 இட்லி சட்னியுடன்- £20.00

அறுசுவையுடன் உங்கள் மகிழ்வும் சங்கமமாக
ஏழ் சுவை ஈழம்

# 'பூபாள ராகங்கள்-2002' கலைஞர்கள் கௌரவிப்பு



புலம் வாழும் லண்டனில் தம் ஊரின் உறவை உணர்வோடும் உயிர்ப்போடும் பதிக்கின்ற இனிய உள்ளங்களான கம்பர்மலை அரசினர் தமிழ்ப் பாடசாலை (கொம்மந்தறை) பழைய மாணவர்கள், ஆண்டுக்கு ஆண்டு இப்போது லண்டனில் நடத்தும் 'பூபாள ராகங்கள்' நிகழ்வு, இங்குள்ள தமிழர்கள் மத்தியில் பிரபலமாகிக் கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு 2வது தடவையாக 'பூபாளராகங்கள்- 2002' கெய்ஸிலுள்ள நவீன பெக் தியேட்டரில் நடந்தது. ஆடலும், பாடலும், நாடகமும், பட்டி மன்றமும் கலந்து முத்தமிழால் சாறு பிழிந்து ரசிகர்களைக் கவரும் வகையில் நிகழ்ச்சிகளைத் தருவதில் வல்லவர்கள் என்பதை இரு வருடத்திலேயே நிரூபித்தார்கள். ஈழத்தில் உள்ள பெரிய பாடசாலைகள் நடாத்துகின்ற 'ஒன்று கூடலும்', விழாக்களும் போலல்லாது, இது ஒரு வித்தியாசமான விழாவாக, அந்த க் கிராமத்துப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவதையே மூச்சாகக் கொண்டு லட்சியத்தோடு நடத்தப்படுகிற விழா என்று பெருமைப்படலாம். சிறிய பாடசாலையில் படித்து, இன்று உயர் நிலையில் லண்டனில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பெரும்பாலானோர் கடைசியாகப் படித்த பள்ளியின் பழைய மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகின்ற இந் நாளில், தாம் படிக்கும்போது கொட்டிலாக இருந்த கம்பர்மலைப் பாடசாலையிலேயே படித்து, தமக்கு கல்வி என்ற அத்திபாரத்தை இட்ட பாடசாலை என நினைவு கூர்ந்து, இங்கு வாழும் இப் பாடசாலையின் பழைய மாணவர் எடுக்கின்ற இவ் விழாவில் கடந்த ஆண்டு பங்கு கொண்ட கலைஞர்கள் சமீபத்தல் கௌரவிகப்பட்டபோது. எடுகப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள். சமீபத்தில் லண்டன் ரூட்டிங் JAFFNA HOUSE உள் அரங்கில் 'பூபாள ராகங்கள்-2002' கலைஞர்களுக்கு பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் விருந்துபசாரமும் , விருதும் வழங்கிக் கௌரவித்தனர். நாடகத்தைத் தந்த தமிழ் அவைக் காற்றுக்கழக இயக்குனர் பாலேந்திராவுக்கு காப்பாளர் சி. துரைராஜாவும், நடன விருந்தளித்த 'நாட்டியாலயா' நிறுவன அதிபர் ராகினி ராஜகோபாலுக்கும், பட்டிமன்ற சொற்பொழிவாளர் மாதவி சிவலீலனுக்கும், காப்பாளர் திருமதி இ. துரைராஜாவும், தமிழ் அவைக் காற்றுக் கழக நடிகர், நாடக பிரதி எழுத்தாளர் கலைஞர் வாசுதேவனுக்கு தலைவர் இ. இரகுநாதனும், விருதுகளை வழங்குகின்றனர். விழா வெற்றிக்கு முக்கிய பங்காளரான மகாலிங்கம் சுதாகரன் விருது வழங்கும் இந்த விருந்துபசார கௌரவிப்பு நிகழ்ச்சியை சிறப்பாகத் தொகுத்தளித்தார்.

## உறவுகள் மேம்பட

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி , மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...**

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்(Lose Talks)

எந்த விஷயத்தையும், பிரச்னையையும் நாசூக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக் கொடுங்கள்(Compromise)

சில நேரங்களில், சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)

நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி, என்று வாதிடாதீர்கள்! (Adamant argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழிங்கள்! **(Narrow Mindedness)**

உண்மை எது? பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விட்டுவிடுங்கள்! (Carrying Tales)

மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்! (Superiority Complex)

அளவுக்கு அதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் / (Over Expectation)

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும்- அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ? இல்லையோ? சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்!

கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்!

அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்!

உங்கள் கருத்த்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்! (Flixibility)

மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற ந்கழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்! (Misunderstanding)

மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்! (Courtesy)

புன் முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்!

பேச்சிலும்- நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து, அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்!

அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்!

பிரச்னைகள் ஏற்படும்போது, அடுத்தவன் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல், நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்!


# M.K. SRI & CO

**SOLICITORS & ADMINISTRATORS OF OATHS**

2c, Fairholme Road, (Off Station Road)
HARROW, MIDDLESEX HA1 2TN
Tel: 020 8515 7000(4 Lines)
Fax: 020 8515 7030
Fax: 020 8515 7031
(For Conveyancing only)
**DX: 4232 HARROW (1)**

Community Legal Service

We specialise in:

* IMMIGRATION
* CONVEYANCING
* TRAFFIC OFFENCES
* CRIME
* MATRIMONIAL
* STATE BENEFITS
* ADVICE & ASSISTANCE AT POLICE STATION

**LEGAL AID WORK UNDERTAKEN**

**OUR NEW SERVICE: WORK PERMIT SCHEME**

Advantages

◆ To enter, work and live in the UK through the Work Permit Scheme
◆ Applies to all whether in the UK or in any part of the world
◆ Switching allowed from Visitor, Student and Dependant Visas
◆ Change of Employment afterward is possible
◆ Permanent Residency in the UK is possible after 4 years of work permit employment

**WE ARE FRANCHISED**
**BY THE LEGAL SERVICES COMMISSION**

PRINCIPAL
M. K. SRITHARAN

ASSISTANT SOLICITORS
S. RAVINDRAN
S. SIVASANTHIRAN
V. RATNAM

TRAINEE SOLICITORS
AVTAR MANKU
SELVI RAVINDRAN

சிவஸ்கந்தகிரி அருள்மிகு முருகன் திருத்தலம்
13-15 THORNTON ROAD, THORNTONHEATH, CROYDON, SURREY CR7 6BD TEL: 020 8684 0747

# சிவஸ்கந்தகிரி அருள்மிகு முருகன் ஆலய முதலாம் ஆண்டு அலங்கார மகோற்சவம்


இலண்டன் குறொய்டன் தோட்டன கீத் பகுதியில் அமைந்துள்ள சிவஸ்கந்தகிரி அருள்மிகு முருகன் ஆலய சித்ரபானு வருடத்திய வருடாந்தர அலங்கார மகோற்சவம், சென்ற 30.5.2002 தொடங்கி 13.6.2002 முடிய 15 தினங்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

30ம் திகதி வியாழ்கிழமை காலை 6 மணிக்கு கணபதி ஹோமத்துடன் பிளையார் திருவிழா தொடங்கப்பட்டது. தொடர்ந்து காலை 10 மணிக்கு, நூதன எழுந்தருளி விநாயகர், மற்றும் ஞான வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மாலை அருள்மிகு சுந்தர விநாயகருக்கு பஞ்சமுக அர்ச்சனையும், தொடர்ந்து விசேட பூஜையும் நடைபெற்றது. இரவு விநாயகர் ஆலய வலம் வந்து பக்தர்களுக்கு அருள் புரிந்தார்.

31ம் வெள்ளிக்கிழமை முதல், தினசரி காலை 10 மணி தொடங்கி, முருகப் பெருமானுக்கு விசேட மூலமந்திர ஜப ஹோமங்கள், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அபிஷேகம், 12மணிக்கு விசேட பூஜை ஆகியவையும், மாலை முருகப் பெருமானுக்கு விசேட அலங்காரங்கள், 8மணிக்கு விசேடமாக சுப்ரமண்ய திரிசதி ஷண்முகா அர்ச்சனை, தொடர்ந்து முருகப் பெருமான் ஆலய வலம் ஆகியவை நடைபெற்றது.

திரு விழா நாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை ஆன்மீகச் சிறப்பு நிகழ்ச்சியாக, இந்தியாவிலிருந்து வருகை தந்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் மாணவி செல்வி மங்கையர்க்கரசி அவர்களுடைய ஆன்மீகப் பிரசங்கம் நடைபெற்றது. லூயிஷியம் சிவன் கோவிலிருந்து ஓதுவார் சாமி தண்டபாணி தேசிகர் அவர்கள் அனுதினமும் வந்திருந்து, தேவார திருப்புகழ் பாடல்களை பண்ணுற இசைத்துச் சிறப்பித்தார். பக்திப் பரவசத்துக்குள்ளாக்கி, மெய் சிலிர்க்க வைக்கும் வகையில் அவர் இசை, இறைவன் சந்நிதியில், அனைவரையும் மெய் மறக்க வைத்தது.



காரூரும் குறொய்டன் வீதி கள் எங்கும் மூன்று மணி நேரம் சிவஸ்கந்தகிரி முருகன் பவனி வந்து பக்தர்களுக்கு தரிசனம் தந்து அருள் பாலித்த நிகழ்வு பக்தர்கள் நெஞ்சத்துக்கு நிறைவான நிம்மதி.

9.6.2002 ஞாயிற்றுக்கிழமை, முருகப் பெருமான் தம் தேவியருடன் மயில்வாகனத்தில் அமர்ந்து, விசேட பூ அலங்காரத்துடன், குறொய்டன் வீதிகளில் பவனி வந்தது, கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

காலை 8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று, தொடர்ந்து முருகப் பெருமான் 3 மணித்தியாலம் வீதி வலம் வந்து, பக்தர்களுக்கு அருள் புரிந்தார். இவ் வைபவத்தில், இலண்டனில் பிரபலமான சிவச்சாரியார்கள் கலந்து கொண்டடு சிறப்பித்தனர். இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல நாதஸ்வர வித்துவான் மாம்பலம் எம். கே. எஸ். சிவா சகோதரர்களின் நாதஸ்வர இன்னிசையும் நடைபெற்றது. இலண்டனின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு, முருகன் அருள் பெற்றனர். வெளி வீதி பவனியின் முடிவில், வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் வயிறார மகாப் பிரசாதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அன்று மாலை பிராயச் சித்த அபிஷேகம் நடைபெற்று முருகப் பெருமானுக்கு பச்சை சாத்தி, ஆலய வலம் நடைபெற்றது.

தொடர்ந்து 10.06.2002 திங்கட்கிழமை திருக் கல்யாண ஊஞ்சல் திருவிழா, 12.06.2002 புதன்கிழமை பூங்காவனத் திருவிழா, ஆகியவை நடைபெற்று, 13.06.02 வியாழக்கிழமை வைரவர் மடையும், ஆலயத்தில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றிப் பக்தர்கள் இதயங்களைக் கொள்ளை கொண்ட மங்கையர்கிகரசி அவர்களுக்கு, பட்டமளிப்பு பாராட்டு விழாவும் நடைபெற்றது.


பதினைந்து நாட்களும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றிய செல்வி மங்கையர்க்கரசி அவர்கள் பேச்சுத் திறன் உண்மையிலே ஒரு இறைவரப் பிரசாதம் என்பதைக் குறிக்கும் வண்ணம், அவருக்கு சிவஸ்கந்தகிரி முருகன் ஆலயத்தின் சார்பில் '**இறையருட்செல்வி**' என்கிற பட்டமும், பொன்னாடையும், பொற் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வெள்ளி விழா காணும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவரும், சைவத் தொண்டனுமான திரு வி. ஆர். இராமநாதன் தலைமையில், லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குரு கயிலை சிவஸ்ரீ நாகநாதசிவக் குருக்கள் முன்னிலையில், நடைபெற்ற இப் பாராட்டு விழாவில், ஆலயத்தின் பிரதம குரு சைவத்திரு சோமநாத குருக்கள், ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு சிவசுந்தரம், இருவரும் பட்டத்தினையும், பொற் பதக்கத்தினையும் வழங்கிக் கௌரவித்தனர்.

பட்டமளிப்பு விழாவில், வி. ஆர். இராமநாதன், சிவஸ்ரீ நாகநாத சிவக் குருக்கள், தேர்த் திருவிழா உபயகாரர் திரு வசந்தகுமாரன், இலண்டன் சிவன் கோவில் அறங்காவலர் திரு கணேசமூர்த், சட்டத்தரணி யோகராஜா, திரு நாராயணன், திருமதி ராதா மகேந்திரன், திரு தியாகமூர்த்தி, 'புதினம்' ஆசிரியர் ராஜகோபால் ஆகியோர், செல்வி மங்கையர்க்கரசியை வாழ்த்திப் பாராட்டிப் பேசினர்.



ஆலயத்தில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றிய செல்வி மங்கையர்கரசிக்கு பிரதகுரு சோமநாதக்குருக்களுடன் இணைந்து தலைவர் சிவசுந்தரம் பட்டம் வழங்கிக் கௌரவிக்கிறார். மங்கையர்கரசிக்கு அருகே அவர் தந்தையார்.



பல்லக் கில் ராஜ அலங்காரக் கோலத்தில் காட்சி அளிக்கிற சிவஸ்கந்தகிரி முருகன் தோற்றத்தை கண்டு பக்தர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.



நூற்றி எட்டுக் குட பால் அபிஷேகத்தை பிரதம குருக்கள் சோமநாத குருக்களும் மற்றொரு ஆலய குருக்களுமான ஸ்ரீதரும் நிறைவேற்றுகின்றனர்.

# தமிழீழ கடைசி மன்னனின் வீரம் செறிந்த தொடர்

## பாயும் புலி பண்டார வன்னியன்

### கலைஞர் மு. கருணாநிதி எழுதும் உண்மை வரலாறு



## 68. மனத்தை மாற்றிய மடல்

வெற்றி விழா- வேதனை விழாவிலே முடிவுற்றாலுங் கூட, அந்நிய ஏகாதிபத்தியத்துக்குக் கண்டி ராஜ்யம் அடிமையாகிவிடவில்லை என்ற மன ஆறுதலுடன் பண்டாரனும், குருவிச்சியும் கண்டியிலே தமது படைகளுடன் நீண்ட காலம் தங்கி விட்டான். எப்படியும் கொழும்பிலிருந்து நார்த் பிரபு கண்டியின் மீது பலம் கொண்டு தாக்குவான் என அவர்கள் எதிர்பார்த்து எச்சரிக்கையாக இருந்தனர். பனங்காமம் பகுதியைப் பரிபாலித்து வந்த தனது தங்கை ஊமச்சிநாச்சியை முல்லைத்தீவின் பாதுகாப்புப் பொறுப்பையும், நிர்வாகப் பொறுப்பையும் சேர்த்துக் கவனித்துக் கொள்ளுமாறு பண்டாரன் பணித்திருந்தான். அவனுக்கும் குருவிச்சிக்கும் அவனது படை வீரர்களுக்கும் கண்டியில் நாள்தோறும் சிறப்பு விருந்துதான்! அதுவும் ஆண்டுக் கணக்கில்!!

அந்நேரம்-

பனங்காமத்தில் இருந்து ஊமச்சிநாச்சியார் விடுத்திருந்த மடல் குருவிச்சிக்கு வந்து சேர்ந்தது.

மடலின் முகப்பில், ''குருவிச்சிநாச்சியார் மட்டும் தனியாகப் படிப்பதற்கு!'' என எழுதப்பட்டிருந்ததால் குருவிச்சி அந்த மடலை மறைத்துக் கொண்டு, கண்டி மாளிகையின் தனி அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு, மடலைமெதுவாகப் பிரித்தாள்.

''அன்புள்ள குருவிச்சிநாச்சியாருக்கு! எனக்கென்னமோ, ''அண்ணியாருக்கு!'' என அழைத்துக் கடிதம் எழுத வேண்டும் போல ஆசை துடிக்கிறது. அந்த ஆசையை நீங்கள் இருவரும் நிறைவேற்ற மாட்டீர்கள் போலிருக்கிறதே! கண்டியில் தோல்வியுற்று மிரண்டோடிய பிறகு ஆங்கிலேயர் அடங்கிக் கிடக்கின்றனர். கொழும்பு நகரில் இப்போது எல் லாம் அவர்கள் கும்மாளம் போட்டுக் கூத்தடிப்பதில்லை. இனிமேல் ஈழத்தில் மட்டுமல்ல இலங்கையில் எந்தப் பகுதியிலும் படை எடுத்துச்செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என ஆங்கிலேய அதிகாரிகள் முடிவெடுத்து விட்டார்களாம். இனி மேல் நமது மண்ணை வளைத்திட கொழும்பில் கூடாரம் அடித்து இருக்கும் வெள்ளையர் கூட்டம் ஒரு கடு களவு முயற்சியிலும் ஈடுபடாது என்றே நம்பலாம். இருவரும் நீங்கள் கொண்டுள்ள சபதத்தை இனிக் கைவிட்டுத் திருமணம் செய்யலாம் அல்லவா? வெட்கப்பட்டு ''போடீ என்று செல்லமாகத் திட்ட வேண்டாம். வெறுப்புடன் என்மீது சீற வேண்டாம். உங்களிருவரின் இனிய நல்ல முடிவை எனக்கு அறிவியுங்கள்!''

அவள் சிந்தனை சிறகடித்து பறந்தது. குருவிச்சிநாச்சியார் கடிதத்தை கையில் வைத்துக் கொண்டு சிந்தித்தாள். ஒவ்வொரு வரியும் அவளைச் சிந்திக்க வைத்து குழப்பத்தில் ஆழ்த்தின. ''ஊமச்சிநாச்சியார் எழுதியிருப்பது உண்மைதானே!'' என்று அவள் உள் மனம் சொன்னது.

ஆனால்,

அவளது நெஞ்சில் இப்படி ஓரிரு கேள்விகள்:'' உடல்கள் உராய்ந்து தழுவி களித்துச் சுகித்தால தானா காதலின் முழுமை?

ஒருவரை ஒருவர் தூய்மையான அன்பினால் கட்டிப் போட்டிருப்பது காதல் இல்லையா?''

அவளது அகன்ற நெற்றியில் வியர்வைத் துளிகள்..

ஊமச்சிநாச்சியார் எழுதியிருப்பது சரிதானே என்ற முடிவுக்கு வந்தவளாக எழுந்தாள், பெருமூச்சு விட்டவாறு. அந்தப் பெருமூச்சு எவ்வளவு ஆழமானது என்பதை, திடீரென விம்மிய அவளது உயரமான மார்பகம் காட்டிக் கொடுக்கத் தவறவில்லை.

கடிதத்தைப் பண்டாரனிடம் கொடுத்தால் என்ன? வேகமாக எழுந்தாள். ஆனால் மெதுவாக அங்கிருந்து நடந்தாள். அரண்மனைத் தோட்டத்தில் பண்டாரன் விக்கிரமராஜசிங்கனுடன் அரண்மனைத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருப்பான்.

''பண்டாரனிடம் நேராகக் கொடுப்பதா?சே! சே! கூடாது. தோட்டத்துக்குப் போய் அவன் என்ன என்று கேட்கும்போது கொடுப்போம் என்று நினைத்தாள்.

அவள் நினைத்தபடியே நடந்தது. ''என்ன குருவிச்சி'' என்றான் பண்டாரன்.

''நீங்கள் பிரமச்சாரி! உங்களுக்குப் பரவாயில்லை. மன்னர் அப்படியா? ராணி எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறார்'' என்று சொல்லிக் கொண்டே, ''களுக்'' என்று சிரித்தாள் குருவிச்சி.

அந்தச் சிரிப்பில் சசிந்திய ஒளி, வெண்ணிலவின் வெள்ளி ஒளி யுடன் போட்டி போட்டு வென்றதை, பண்டாரன் கண்டு மயங்கினான். எனினும் சமாளித்துக் கொண்டான்.

''அடடா! அரசி காத்திருககிறாளா? இதோ போகிறேன்!'' என்று கூறிக் கொண்டே விக்கிரமராஜசிங்கன் தோட்டத்தை விட்டு நகர்ந்தான் வேகமாக.

ஆனால் அவன் போகாது குருவிச்சி, பண்டாரனுடன் தனிய குலவுவதற்காகத்தான் தன்னை அரசி காத்திருக்கிறாள் என்று பொய் சொல்வதாக நினைத்து செடி மறைவுக்குள் பதுங்கினான்.

''என்ன குருவிச்சி? எங்கே வந்தாய்? திடீரென்று?''

''வரக் கூடாதா?''

''யார் சொன்னது அப்படி? இவ்வளவு நாட்களாக இந்த அரண்மனையில் இருக்கிறோம்! ஒரு நாளிலாவது நீ இரவு நேரத்தில் தோட்டத்துக்கு என்னைக் காண வந்திருப்பாயா? நானும் வந்ததில்லையே!''

''இன்றைக்கும் வருவதாக இல்லை. ஆனால் வரும்படியாக ஒரு கடிதம்''

''கடிதமா? நானா? உனக்கு எழுதினேனா?''

''இந்தக் கடிதத்தை நீங்கள் எழுதவில்லை. உங்கள் தங்கை ஊமச்சி நாச்சியார் எழுதியது''

கடிதத்தைப் பிரித்தான்!

ஊமச்சியின் கடிதத்தைப் படித்த பிறகு தனக்கு ஏற்பட்ட மனமாற்றம், பண்டாரனுக்கும் ஏற்பட்டே தீரும்.

தோட்டத்தில் யாருமில்லாத காரணத்தால் திடீரென்று ஓடிவந்து தழுவிக் கொண்டாலும் கொள்வான். அய்யோ! நிலவு வெளிச்சம் வேறு பகல் போல் இருக்கிறதே! குருவிச்சி யின் இருதயத்துடிப்புகள் அவள் காதுகளிலே கேட்கிற அளவுக்கு உரக்க ஒலித்தன.

அவளால் அவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை!

ஒருவரை ஒருவர் நிமிர்ந்து நோக்கி பார்த்தவாறு, எத்தனையோ களங்களைப் பற்றிப் பேசியிருக்கின்றனர். எத்தனையோ போர்த் திட்டங்களை வகுத்திருக்கின்றனர். ஆனால் இப்போது? குருவிச்சி! தனது கால் விரல் மீது பதித்த பார்வையை விலக்காமல் குனிந்து நின்றாள்.

அந்தக் கால் விரல் நுனியில் காயம் ஏற்படுகிற அளவுக்கு அந்தக் கடிதம் வந்து விழுந்தது. மடலின் கனமான உருளைபட்டுக் கால் விரல் ரத்தம் கசிந்தது! அதைப் பொருட்படுத்தாமல், குருவிச்சி நாச்சியார் பண்டார வன்னியனை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

## 69. தோட்டத்தில் கேட்ட ஒலி!

உன்னுடைய ஏற்பாடு மிகவும் பிரமாதம்! என் தங்கை ஊமைச்சிநாச்சியாரை கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தக் கடிதம் மூலம் தொடங்கி விட்டாய், உன் நாடகத்தை!''

-நிலவொளிபட்டுக் குளிர்ந்து காணப்படவேண்டிய பண்டாரனின் முகம், நெருப்புச் சுடராய் தோற்றமளித்ததைக் கண்டு, குருவிச்சி நடுங்கிப் போனாள்! அவளது கால் விரல்களில் கசிந்த ரத்தத்தை கண்டுவிட்ட பண்டாரன், அதற்கு மேல் எதுவும் பேசாமல் உடனே தனது மேலங்கியின் ஒரு முனையைக் கிழித்துப் பரபரப்புடன் அந்தக் காயத்தில் சுற்றினான். முகத்தில்தான் தீப்பிழம்பு! அகத்தில் சந்தனக் குழம்பு என்பதைப் புரிந்து கொண்ட குருவிச்சி, ''என்னை மன்னித்து விடுங்கள்!'' என்றாள். வீரம் கொப்பளிக்கும் அவன் நெஞ்சத்தில் ஈரமும் அந்தளவுக்கு உண்டு என்பதை அவள் அறியாதவளா?

''நிற்காதே! உட்கார்!!'' என்று அவள் தோளைப் பிடித்து அழுத்தி, அங்கிருந்த அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கருங்கல் ஆசனத்தில் அமர்த்தினான்.

''நீங்கள் நிற்கிறீர்களே?''

''நானும் உன் பக்கத்தில் அமர்ந்து கொள்ள வேண்டுமா? தாலியும் தயார் செய்து கொண்டு வந்து விட்டாயாக்கும்!''

''ஏன் இப்படிச் சீற வேண்டும்? தங்கச்சி எழுதிய கடிதம்! உங்களிடம் அதைக் கொடுக்காவிட்டால் பிறகு கோபித்துக் கொள்ளமாட்டீர்களா?''

''தங்கச்சியே எழுதினாள் என்று சொல்வதை நான் நம்புகிறேன். இந்தக் கடிதத்தை நீ படித்ததும் என்ன செய்திருக்க வேண்டும்? நீயே கிழித்து கொளுத்திப் போட்டிருக்க வேண்டாமா?''

''உங்கள் மனதில் உள்ளதை தெரிந்து கொள்ளாமல் நான் எப்படி அவசரப்பட்டிருக்க முடியும்?''

''இத்தனை காலமும் பழகியும், என் மனதில் உள்ளதை நீ தெரிந்து கொள்ளவில்லை என்பது நம்ப முடியாத ஆச்சரியம்!''

''நமது இலட்சியம் பெருமளவு ஈடேறிவிட்டது என்று...''

''என் தங்கை கருதுகிறாள். நீ நம்புகிறாயா? வெள்ளைக்காரன் பயந்து விட்டான் என்று நினைப்பது தவறு. பதுங்கயிருக்கிறான. எந்த ரேத்திலும் அவன் படைகள் நம்மீது பாயக் கூடும். என்ன நான் சொல்வது புரிகிறதா?''

''தங்களின் கணிப்புச் சரியானதாகவும் இருக்கலாம்! என்னைத் தட்டிக் கழிக்கும் தந்திரமாகவும் இருக்கலாம்''

''சே! நாட்டுப் பற்றுக்கா நீ விடை கொடுத்து விட்டாய்! உடல் பசி உன்னை காட்டுத் தீ போல் பற்றிக் கொண்டு விட்டது..''

''என்னை இவ்வளவு கேவலமாக எண்ணுவீர்கள் என்று நானும் எதிர்பார்க்கவில்லை! என் லட்சியத்தக்கு வலுவளிப்பது உங்களைப்பற்றிய நினைவு ஒன்றுதான்! அப்படியான என்னை 'உடற்பசிக்காரி' என்று சொல்லி விட்டீர்களே!''

''பிறகென்ன? கணவன் ஏற்றுக் கொள்கிற பொறுப்பான கடமையில் அவன் மனம்போல் நடந்து கொண்டு அவனது முயற்சிகள் வெற்றி பெற எள் முனையளவு இடையூறுமின்றி ஒத்துழைப்புத் தருவதுதானே உண்மையான ஒரு மனைவி கடமை!''

''கணவன் என்கிறீர்கள். அந்தத் தகுதியை எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறேன். நீங்களோ அந்தத் தகுதியை எனக்கு வழங்க மறுக்கிறீர்கள்! பிறகு எங்கிருந்து வந்தது கணவன் மனைவி உறவு?''

குருவிச்சியின் இந்தக் கேள்வியில் பண்டாரன் திக்குமுகாடித் திகைத்துப் போனான்.

''சரியான கேள்வி! என் நண்பனைச் சவுக்கால் அடித்தது போன்ற கேள்வி! சபாஷ் குருவிச்சி!''

- என்று கலகலவெனச் சிரித்தவாறு விக்கிரம ராஜசிங்கன் அங்கே விரைந்து வந்தான்.

''நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று வியப்புடன் முகம் சிவந்தான் பண்டாரன்.

''ஏற்கனவே கோபமாக இருகிறாய்! இன்னும் கொஞ்சம் கொந்தளிக்காதே!'' என்று கூறிக் கொண்டே, அருகில் வந்த கண்டி மன்னன் அவனைத் தழுவிக் கொண்டான். குருவிச்சிநாச்சியார் வீர மங்கைதான் எனினும் விஷயம் காதலின் உச்சக் கட்டத்தைப் பற்றியதால் தலை குனிந்து நின்றாள்.

''நண்பா! எல்லாவற்றையும் கேட்டு கொண்டுதானிருந்தேன்! ராணி என்னைத் தேடிக் கொண்டிருப்பதாக குருவிச்சி சொன்னதை நான் நம்பவில்லை. புரியாத புதிர்களாக இருக்கும் உங்கள் இருவரையும் பற்றி, இன்றைக்குஎப்படியும் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்றே மறைந்திருந்தேன்''

''மண்ணாளும் மகராசனுக்கு இப்படி ஒரு புத்தி இருக்கக் கூடாது!''

''புத்தியே இருக்கக் கூடாது என்று கூடச் சொல்வாய். சொல்லி விட்டுப் போ! அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எனது சுக துக்கங்களுக்காக அல்லும் பகலும் அக்கறை கொண்டு உழைக்கும் ஓர் இனிய நண்பனின் இல் வாழ்க்கை இனிதாக அமைய வேண்டுமெனக் கவலைப்பட எனக்கு உரிமை உண்டு என்பதை உன்னால் மறுக்கமுடியாது''

''விக்கிமா! நானும் குருவிச்சியும் உடல்களால் இருவரே தவிர உயிரால், உன்னதமான இலட்சியத்தால் ஒருவரே என்பதை அறியமாட்டாயா?''

''உடலால் ஒருவராய் இருந்தாலென்ன? உடலால் ஒருவரானால் உயிரால் இருவராகி விடுவீர்களா? உடலால் ஒருவர் என்பது எப்போதுமா? எப்போதாவதா?''

''விக்கிரமா! இப்போது என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்? பண்டாரா! அபடி வா என் பாதைக்கு.

(14ம் பக்கம் பார்க்க)

# 'பாயும் புலி' பண்டாரவன்னியன்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றும் வேண்டாம்! எனக்கு ஒரு ஆசை! உங்கள் இருவரையும் மணக் கோலத்தில பார்க்க வேண்டும்!''

''சரி! நண்பனே!உன் விருபத்தை நிறைவேற்றுகிறேன். எங்கள் லட்சியம் முழுமையாக நிறைவேறும் வரை நாங்கள் கல்யாணமாகியும் பிரமச்சாரிகள்தான்!''

''அது போதும் எனக்கு!'' என்று துள்ளிக் குதித்தான் விக்கிரமராஜ சிங்கன்.

''திருமண எற்பாடுகளை நாளைக்கே தொடங்குகிறேன்!'' என்றான்.

''முதலில் என் தங்கைக்கு செய்தி அனுப்பிடுக!'' என்று இதழோரப் புன்னகையை நெளிய விட்டான்.

மூவருமே மகிழ்ச்சியில் ஆழந்தனர்.

''இப்போதுதான் என் மனம் நிம்மதியடைந்தது!'' என்று விக்கிரமராஜசிங்கன் பெருமூச்சு விட்டபோது -

கண்டி அரண்மனையில் முரசம் பேரொலியுடன் அதிர்ந்தது! ஏதாவது ஆபத்தானதும், அவசரமானதுமான செய்தி என்றால் எந்த நேரத்திலும் அந்த முரசு ஒலிப்பது வழக்கம்!

## 70. இன்பம், இமைப்பொழுது!

முரசொலியைத் தொடர்ந்து என்ன செய்தி வரப்போகிறது என்று மூவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு அந்த அழகிய பூங்காவிலிருந்து அரண்மனை நோக்கி நடந்தனர்! அவர்கள் அரண்மனைத் தாழ்வாரத்தை நெருங்குவதற்குள்ளாக கண்டியின் வீரர்களும்முல்லைத்தீவின் வீரர்களும் மிகவும் பரபரப்புடன் நாலாப் பக்கமும் படைக் கலன்களைத் தாங்கிய கைகளுடன் ஓடி வந்து குழுமினர். வீரர்கள் புற்றீசல் போல் புறப்பட்டதைக் கண்டு மகிழ்ந்தும் - தனது மன்னவர் வருவதைக் கண்டு புத்துணர்வு கொண்டும்- கோட்டை முகப்பில் முரசறைந்து கொண்டிருந் தவன் ஓடோடி வந்து அந்த மூவரின் எதிரிலும் வணங்கி நின்றான்!

''என்ன நடந்தது?'' என விக்கிரமராஜசிங்கன் அவனைப் பார்த்து சிங்கம் போல் கர்ச்சனை செய்தான்!

''கொழும்பிலிருந்து பிரமாண்டமான ஆங்கிலேயப் படைகள் புறப்பட்டிருக்கின்றனவாம். கண்டியை நான்கு புறமும் சுற்றி வளைப்பதென்றும், அதே நேரத்தில் முல்லைத்தீவையும் நான்கு திசைகளிலும் சுற்றி வளைக்கப் படையை அனுப்புவதென்றும் கொழும்பில் திட்டம் தீட்டப்பட்டு, அவ்வாறே ஆங்கிலேயப் படைகள் புறப்பட்டு விட்டன!''

-முரசறை வீரன் இச் செய்தியைச் சொன்னதும், ஆத்திரம் கொப்பளிக்கப் பண்டார வன்னியன் ''என்ன?'' என்று கொதித்தெழுந்தான்.

''முல்லைத்தீவின் படை வீரர்கள் கண்டியைக் காப்பாற்றஉடனடியாக வியூகம் வகுத்து எல்லைப் பகுதிகளுக்குச் செல்லுங்கள்! '' என்று பண்டார வன்னியன் விடுத்த ஆணையை விக்கிரமன் ஏற்றுக் கொள்ளவில்லை.

''நண்பா! நம் இரு நாடுகளில் எந்த ஒரு நாடு ஆங்கிலேயர்களின் வசப்பட்டாலும், அதைத் தொடர்ந்து மற்றும் ஒரு நாடு, அவர்களால் அழிக்கப்பட்டே அடிமைப்பட்டு விடும். அதனால் கண்டியைக் காப்பாற்றிக் கொள்ள நானும், எனது நாட்டு வீரர்களும் களம் காண்கிறோம். நீ உடனே உனது வீரர்களுடன் முல்லைத்தீவை நோக்கிப் புறப்படு! ஆங்கிலேயப் படை முல்லைத்தீவை நெருங்குவதற்குள், உனது வீரர்கள் அவர்களை எதிர்ப்பதற்குத் தயாராக முல்லைத்தீவின் எல்லைகளுக்குப் போயாக வேண்டும்!''

விக்கிரமராஜசிங்கன் சொன்ன கருத்து ஏற்கக் கூடியதுதான் என்று பண்டாரனுக்குத் தெரிந்தாலும் கூட, கண்டியை விட்டுச் செல்வதற்கு ஏனோ அவனுக்கு மனமில்லை!

''விக்கிரமா! நாம் எப்படியோ அலட்சியமாக இருந்து விட்டோம். தோற்றோடிய அந்நியர் மீண்டும் நம்மீது வஞ்சினம் கொண்டு வளைக்கக் கூடும் என நினைத்தோமே தவிர, அதற்கான தற்காப்பு ஏற்பாடு களைச் செய்து கொள்ளாமலேயே இருந்து விட்டது பெருந்தவறு!''

''பண்டார வன்னியன் முகத்தில் முதன் முதலாக கலக்கத்தின சாயலைக் காண்கிறேன்!''

''கலக்கமில்லை! கண்டியைக் காப்பாற்றும் கடமையிலிருந்து என்னை விலகச் சொல்கிறாயே! அதை எண்ணித்தான் சற்று தயங்குகிறேன்!''

''தயக்கமே கூடாது! நான் சொல்வதைக் கேள்! நீயும் குருவிச்சியும் முல்லைத்தீவின் படைகளுடன் இங்கிருந்து விடியற் காலை புறப்பட்டாக வேண்டும்!''

''அது ஏன் விடியற் காலை? புறப்படுவதென்றால் இப்போதே புறப்பட வேண்டியதுதானே!''

''அதற்குள் ஒன்றும் தலை போய் விடாது. நீயும் குருவிச்சியும் என் கண் முன்னால் மணமக்களாகக் காட்சி தர வேண்டும் என்று கூறினேனே அந்த ஆசை நிறைவேற வேண்டாமா?

''என்ன விக்கிரமா! எதிரிகள் எனது நாட்டையும், உனது நாட்டையும் சுற்றி வளைக்க வருகிறார்கள் எனச் செய்தி வந்துள்ளது. இப்போது பார்த்து இப்படி எல்லாம் விளையாடு வதா?''

''வா, இங்கே! உன்னுடன் தனியாக இரண்டு வார்த்தை பேசவேண்டும்!''

- என்றவாறு பண்டார வன்னியனை விக்கிரம ராஜசிங்கன் காற்றிலாடிக் கொண்டிருந்த பட்டுத் திரைக்குப் பின்னால் அழைத்துச் சென்றான்.

''என்ன ரகசியமா விக்கிரமா?''

''ஒன்றுமில்லை! யுத்தம் என்று வந்து விட்டால் நாமோ அல்லது எதிரியோ, இரு சாராரில், ஒரு சாரார் சாவைத் தழுவித்தான் தீர வேண்டும்! நமது பலத்தை, முழுத்திலும் கண்கிட்டுக் கொண்டிருக்கின்ற ஆங்கிலேயர் இந்த முறை நம்மீது சாதாரணமாக மோத மாட்டார்கள். அதனால் நானோ, அல்லது என் உயிர் நண்பனாகிய நீயோ, இந்தப் போரில் பலியாகப் போவது என்னமோ உண்மை எனக்குத் தோன்றுகிறது! இந்த நேரத்தில் என் நெஞ்சைத் துளைத்துக் கொண்டிருக்கிற விருப்பத்தை நிறைவேற் றியே தீர வேண்டும்!''

''விபரமாகச் சொல்லு! நீ எங்களை மணக் கோலத்துடன் பார்க்க வேண்டும்! அவ்வளவுதானே!''

''மணக் கோலத்துடன் பார்ப்பது மட்டுமல்ல! அந்தக் குருவிச்சி தனது நெஞ்சில் எவ்வளவு ஆசைகளைப் புதைத்துக்கொண்டு துடித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை என் ராணி சொல்ல நான் தெரிந்து வைத் திருக்கிறேன்!''

''அதனால்?''

''அதனால் ஒன்றுமில்லை. அமங்கலமாக ஏதோ உளறுகிறேன் என்று எண்ணக் கூடாது. உன்னையே தெய்வமாக நினைத்து உருகிக் கொண்டிருக்கும் இந்த உத்தமியுடன் இந்த ஓர் இரவு இன்ப இரவாக நகரட்டும். விடியற்காலை போர் முனைக்குப் புறப்படுவதற்கு குருவிச்சியின் வாழ்வில் ஓர் விடியல் ஏற்படட்டும்.''

பண்டார வன்னியனை இளக வைத்து இதயத்தை கசிய வைத்து விட்டது விக்கிரமராஜசிங்கன் வார்த்தைகள். மன்னின் தோளில் கை வைத்து அழுத்தியவாறு, ''சரி! எல்லாம் மன்னரின் உத்தரவுப்படி நடக்கட்டும்!'' என்றான் பண்டாரன்.

அடுத்த கணமே, அவனை தழுவி ஆனந்த வெள்ளத்தில் மிதந்தவாறு அரண்மனை அந்த்புரத்தை நோக்கி நடந்தான்.

''ராணீ! யுத்தம் நம் நாட்டையும் முல்லைத்தீவையும் நோக்கி வருகிறது என நீயும் கேள்விப்பட்டிருப்பாய்! கண்டியைக் காத்திட நமது படைகள் தயார். முல்லைத்தீவைக் காத்திட பண்டாரனும் குருவிச்சியும் விடியற்காலை படைகளுடன் புறப்பட இருக்கிறார்கள். அதற்குமுன் நீயும் நானும் பேசிக்கொண்ட திட்டப்படி...''

''தங்கள் ஆணை எதுவோ, அதற்கு நான் காத்திருக்கிறேன்''

''வெறும் மலர்களை மட்டும் மாற்றிக் கொள்ளக் கூடாது. முத்தாரங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொன்னேனே!''

''நினைவில்லாமலா அந்த மாலைகளை எப்போதோ தயாரித்துப் பேழையில் வைத்துப் பூட்டியிருக்கிறேன்'' என்று கூறிக் கொண்டே- ராணி ஓடிச் சென்று ஒரு வெள்ளிப் பேழையை எடுத்து வந்து கண்டி மன்னன் கையில் கொடுத்தாள்.

''இப்போது எங்களின் அன்பான இதய வாழ்த்துடன் மாலை மாற்றிக் கொள்ளுங்கள்'' என்று மகிழ்ச்சி பொங்கிட வேண்டிக் கொண்டான் விக்கிரமராஜசிங்கன்.

பண்டாரன் குருவிச்சியின் கழுத் தில் முத்துமாலையை அணிவித்தான்! அருகில் இருந்த ராணி, குருவிச்சியை அரவணைத்தவாறு அவள் கையில் இருந்த முத்துமாலையைப் பண்டாரன் கழுத்தில் அணிவிக்கச் செய்தாள்!

''எங்களுக்காகக் காத்திருக்கும் பால் பழம் எல்லாம், இப்போது உங்களுக்கே! வா ராணி வோகலாம்!''

பண்டாரனும் ராணியும் நழுவப் பார்த்தனர்.

ஆனால் பண்டாரனை விக்கிரமனும், குருவிச்சியை ராணியும் அந்த அறைக்குள்ளே தள்ளிக் கதவைச் சாத்தினர். கண்டி மன்னன் கதவைச் சிறிது திறந்து பண்டாரனைப் பார்த்து, ''விடியற்காலை வந்து எழுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு கதவின் வெளிப்புறத்தைப் பூட்டிக் கொண்டு போய்விட்டான்!

நீண்ட மௌனத்தின் பின் பண்டாரன் பேச்சைத் தொடங்கினான்:

''குருவீ! காலையில் களம் காணப் போர்க்கோலம் பூணப் போகிறாய். உண்மை! காலையில் காணப் போவது போர்க்களம்! இப்போது போர்க்களம் காண்போம் வா!''

என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்! இருவரும் சேர்ந்து கட்டிலில் வீழ்ந்தனர்! எத்தனையோ நாட்கள் தொலைவில் இருந்து பார்த்துத் துடித்ததும், நெருக்கமாக இருந்து பார்த்து நெஞ்சில் ஏக்கத்தைப் பெருக்கியும், தவித்த குருவிச்சிக்குப் பண்டாரன் தந்த தழுவல் இன்பம்- இதயத்தை தண்பொழிலாக்கி, இன்னுடலை தணலாக்கி மகிழ்வித்தது!

ஆனால், இன்பம் இமைப் பொழுது கூட இல்லை! கட்டிலில் இருவரும் தழுவியவாறு, விழுந்த அடுத்த கணமே அந்தப்புரக் கதவு தட்டப்பட்டது. இருவரும் வாரிச் சுருட்டி எழுந்தனர். கதவின் பூட்டு வெளியே திறக்கப் படும் ஓசை கேட்டது.

(அடுத்த இதழில் தொடரும்)


## VACANCIES

**LONDON SCHOOL OF CARNATIC MUSIC**
Based at LONDON SIVAN KOVIL
4A Clarendon Rise, Lewisham
London SE13 5ES

WE CONDUCT CLASSES IN
TAMIL LANGUAGE, SAIVAISM, VOCAL MUSIC, VIOLIN, MIRUTHANGAM, VEENA, YOGA & BHARATHANATYAM

To meet the demand we require TEACHERS to teach Miruthangam, vocal and violin and accompany carnatic musical concerts at the above school.

Candidates should posses sangeetha vidvan certificate from an establishird musical institution with minimum of five years experience in both fields.

Salary will be negotiated according to qualification and experience. Please send your application on or before 20th July 2002.

**LONDON SCHOOL OF CARNATIC MUSIC,**
49 Ravenensbourne Park Crescent,
Catford,
London SE6 4YG



## MARKANDAN & CO

Thamil house, 720 Romford Road, Manor Park
London E12 6BT
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303 Mobile: 07932 723 283
Email: mm@markandan-solicitors.co.uk

We now specialise in all kind of work permits at very modest rates.

If you have qualifications and work experience in the following fields, we shall get you a work permit for a period of 5 years without any usual recruitment process.

*NETWORK ENGINEERING *DATABASE ADMINISTRATION
*COMPUTER PROGRMMING *BUSINESS ANALYSIS

If you have any qualifications and experience in the following fields, we will act for your employer including handing advertisement and recrutment process to get your work permit.

*ACCOUNTANCY *CATERING AND COOKERY
*OFFICE MANAGEMENT*CONSULTANCY

We arrange training and work experience work permit for any training and work experience in this country.

We also handle work permit for nurses, teachers and nannies.

FOR DETAILS CONTACT MR. KUMAR ON
07932 723 283

# நிர்வாணம்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தின் முதல்வரின் காரின் நிறம் என்ன? இது போன்ற கேள்விகளைக் கேட்டு–அதி சிறந்த அறிவாளியைத் தேர்ந்தெடுக்கும் தொலைபேசி–வானொலி நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு–கேட்டு விட்டு–இது தான் அறிவு என்று எண்ணி–வென்றவர்களின் அறிவுத் திறமையை மெச்சி–அந்த அறிவாளியைப் போலவே நாமும் வர வேண்டும்–நமது பிள்ளைகளும் வர வேண்டும் என்று முட்டாள்த்தனமான முயற்சி எடுப்பவர்களைப் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பதினெட்டு வயதில் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் தோல்வியடைந்ததும் உனக்கு இனி வாழ்வே இல்லை–உனது பிறவியே வீணாகி விட்டது–என நண்பர்கள்–உற்றார்கள்–உறவினர்கள்–ஆசிரியர்கள்–கூறியதை அப்படியே நம்பி–வாழ்க்கையில் விரக்தியடையும் மாணவர்கள். பரீட்சையில் சித்தியடையாத இப்படியொரு உதவாக்கரை மகனைப் பெற்று விட்டேனே–நாலு பேர் முகத்தில் இனி எப்படி முழிக்கப்போகிறேன்–சமூகத்தில் எப்படித் தலை நிமிர்ந்து நடக்கப் போகிறேன் என்று விசனப்பட்டு–கவலைப்பட்டு–மார்பு


நோயால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அப்பாக்கள். இப்படியான மாணவர்களுக்கு–பரீட்சையில் தோல்வியடையும் மாணவர்களுக்கு–இனி எதிர்காலம் என்ன என்பதை திட்டமிடும் அயலவர்கள்–ஊர்ப் பெரியவர்கள். இவர்களையெல்லாம் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

அவன் சிரித்த காரணங்களை ஊகிப்பதற்கு நாம் படும் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு அவனே அசரீரியாக ஒலிக்கிறான். கேட்கிறதா உங்களுக்கு?

"பக்தி என்ற பெயரில்–இறைவழிபாடு என்ற பெயரில்–தேச பக்தி என்ற போர்வையில்–சாத்திரங்கள் என்ற பெயரில்–கல்வி என்ற பெயரில்–கலை கலாச்சாரம் என்ற பெயரில்– நீங்கள் செய்யும் கோமாளித்தனங்களை–பித்துக்குளித்தனங்களை பார்த்து இன்று நான் மட்டுமே சிரித்தேன். ஆனால் இப்படியே நீங்கள் தொடர்ந்தால்–நாளை உங்களைப் பார்த்து நீங்கள் வளர்க்கும் நாயும் சிரிக்கும்–மயானத்தில் திரியும் பேயும் சிரிக்கும்.

போர்வைகளற்ற அவதானம் இந்த நிர்வாணம். அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம். அது ஒரு சத்தியம்.


**Meera Gold Smith**




896 Garratt Lane, Tooting, London SW17 0NB
Tel : 020 8767 2616
Mobile : 0795 894 8685



**8 SEATER VAN & JEEP SELF DRIVE**
**TEL: 020 8644 0207**
**MOB: 07961 434 757 / 07961 434 760**
**(24 Hours)**

உங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் விடுமுறையில் ஒன்று கூடிச் செல்லவா? கனடா, மற்றும் ஐரோப்பா நாடுகளிலிருந்து லண்டன் வரும் உங்கள் உறவினர்கள், நண்பர்களை அழைத்துச் சென்று, பொழுதை இன்பமாகக் கழிக்க நல்ல வாகனம் வேண்டுமா? எதுவானாலும் கவலையை விடுங்கள்! எட்டுப் பேர் அமர்ந்து பயணம் செய்யக் கூடிய வசதியான வான், ஜீப் எல்லாமே எங்களிடம் உண்டு. நீங்களே ஓட்டிச் செல்லலாம்! தேவையாயின் சாரதிகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

**VERY SPECIAL RATES FOR WEEKENDS**


## 'புதினம்' இதழில் புதிய அரசியல் நாவல்

இலங்கையின் நிகழ் கால அரசியல் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த புதிய அரசியல் நாவல் மிக விரைவில் தொடராக வெளிவரவிருக்கிறது. 'புதினம்' இதழுக்காக பிரபல ஈழத்து எழுத்தாளர் எழுதும் விறுவிறுப்பாக இந்நாவல் உங்கள் இதயத்தை ஊடறுத்தச் செல்லும்.


**லண்டனில் அனுபவம் வாய்ந்த வாகன திருத்துனர்கள்**

# Engine Tec Motors

**என்ஜின் ரெக் மோட்டர்ஸ்**





WE OFFER FACILITIES FOR:

- *Servicing *Clutches
- *Car Electrics
- *Overhauls
- *all Types of Repairs
- *Pre MOT Checks

*உங்கள் வாகனங்களின் சகல வித திருத்த வேலைகளையும் குறித்த தவணையில் தரமான முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்:*



**Ask: VEL or RAJAN**
**Tel: 020 8640 1230**
**Mob: 07860 770 945/ 07860 226 476**

**339C LONDON ROAD, MITCHAM, SURREY CR 4 4BE**

# Mithus

நம்பிக்கை– உயர்தரம்– மாசு மறு அற்ற அழகு!
எங்கள் காட்சி அறைக்கு ஒரு முறை வாருங்கள்!!

322-324 LONDON ROAD, CROYDON, SURREY CRO 2TJ
TEL: 020 8683 1756 FAX: 020 86831792
OPEN 7 DATS A WEEK

## JEWELLERY & TEXTILE



குறோய்டனில் புகழ் பெற்ற Mithus நகை மாளிகையினரின்

## அதிரடி மலிவு விற்பனை

*தவற விடாதீர்கள்! இப்போதே விரையுங்கள்!!*

வைர நகைகள் 15% விலைக் கழிவில்
22 கரட் தங்க நகைகள் யாவும் 25 %
விலைக் கழிவுகள்(செய் கூலியில்)

£500 பவுண்களுக்கு மேல் நகை வாங்கினால்– ஒரு ஜோடி தோடு இலவசம்
£1,000 பவுண்களுக்கு மேல் நகை வாங்கினால்– ஒரு தங்க நாணயம் இலவசம்
£2,000 பவுண்களுக்கு மேல் நகை வாங்கினால்–ஒரு பட்டுச் சேலை இலவசம்
*[குறிப்பு– தாலிக் கொடிகளுக்கு மட்டும் இவ் இலவச சலுகை கிடையாது]*

தங்கக் குவியலுக்குள் தங்க நகைகளோடு பட்டு வண்ணச் சேலைகள் வாங்க ஒரே வசதியான இடம்

சகல காஞ்சிபுரப் பட்டுச் சேலைகளும்
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்

லண்டனில் இரு தங்கக் களஞ்சியங்கள்

# வைரமாளிகை
# Diamonds Palace

76 Tooting High Street, London SW17 0RN Tel: 020 8767 5333